# விஸ்வரூபம்



SOCIAL WELFARE ORGANIZATION

**VIVEKANANDA PARK**

**விவேகானந்த பூங்கா**


மட்டக்களப்பு, இலங்கை

web: www.vivekanandapark.com

மக்கள் சேவையே மகேசன் சேவை

SERVICE TO HUMAN BEING IS SERVICE TO THE GOD

මිනිසුන්ට කරන සේවය දෙවියන්ට කරන සේවයකි



## நூல் முகம்

மலரின் பெயர்:- விஸ்வரூபம்
வகை:- விவேகானந்த பூங்கா திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலர்
வெளியீடு:- சமூக நலன்புரி அமைப்பு (SWO)
பதிப்பு:- 2024
பக்கங்கள்:-
பிரதிகள்:- 500
அச்சுப் பதிப்பு:-
கணணி வடிவமைப்பு:- திரு.வயிரமுத்து திவாகரன் அவர்கள் (வெளிக்கள உத்தியோகஸ்தர், SWO)

## பொருளடக்கம்

பக்க எண்

01.ஆசிச் செய்தி:........................................01
02.சுவாமிஜிக்களின் ஆசிச்செய்திகள்:........................................2 - 07
03.அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி:........................................08
04.இலண்டனில் இருந்து ஸ்தாபகரின் செய்தி:........................................09
05.நிறுவன தலைவரின் செய்தி:........................................10
06.அரச அதிகாரிகளின் வாழ்த்துச் செய்திகள்:........................................11 - 18
07.அவுஸ்திரேலியர் மகளிர் இல்ல தலைவரின் செய்தி:........................................19
08.நன்கொடை வழங்கியோரின் செய்திகள்:........................................20-28
09.ஆலோசகரின் வாழ்த்துக்கவி:........................................29
10.இணைப்பாளரின் நிறுவன செயற்பாடுகள் தொடர்பான செய்தி:........................................30
11.விவேகானந் தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளரின் செய்தி:........................................31
12.பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்ல முகாமையாளரின் செய்தி:........................................32
13.முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலைய தலைவரின் செய்தி:........................................33
14.முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலைய முகாமையாளரின் செய்தி:........................................34
15.மண்டூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மன்ற தலைவரின் செய்தி:........................................35
16.நிறுவன செயற்பாடுகள் தொடர்பான புகைப்படங்கள்:........................................36-45
17.விவேகானந்த பூங்கா நிர்மாணப் பணிக்காக நிதியுதவி வழங்கியோர்:........................................46
18.நன்றி பகிர்வு:........................................47

ஒரு சாதாரணமான மனிதன் சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றி வாழ்க்கையில் எந்தளவு உயர முடியும், எந்தளவு ஆக்கபூர்வமான பணிகளையெல்லாம் செய்யமுடியும் என்பதனை என் வாழ்க்கையில் நான் நன்கு உணர்ந்துள்ளதோடு அந்த பாதையில் வெற்றியும் பெற்றுள்ளேன். ஆதலால் அவரது சிந்தனைகள் நமது இளைய சமுதாயத்தை போய் சேரவேண்டும் என்று விரும்புகின்றேன்.

- க.சற்குணேஸ்வரன்



சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்
நிறுவன ஸ்தாபகர்
திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களின்
உள்ளத்தில் ஏற்படுத்திய ஒரு பெரும் தாக்கத்தின் காரணமாக அவரால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள்.



சமூக நலன்புரி அமைப்பு
(SWO BATTICALOA & SWO UK)
விவேகானந்த பூங்கா
விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி
திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம்
திலகவதியார் மகளிர் இல்லம், கதிரவெளி, வாகரை
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், முல்லைத்தீவு

**மரணம் வரும் வரையில் வேலை செய். நான் உன்னுடன் இருக்கின்றேன். நான் போன பிறகு என் ஆத்மா உன்னுடன் இருந்து வேலை செய்யும்.**

**- சுவாமி விவேகானந்தர்**

**Vivekananda Park**

**விவேகானந்த பூங்கா**

# விவேகானந்த பூங்கா

## நோக்கம்

மனதை நல்வழிப்படுத்தும் நல்ல சிந்தனைகளையும், மன மகிழ்வையும் இளைய சமுதாயத்திற்கு வழங்கி அவர்களின் வாழ்க்கை மேம்பட உதவுவதுடன், எமது மாவட்டத்தின் ஆன்மீக, கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் இயற்கையுடன் கூடிய ஒரு சுற்றுலா மையமாக விளங்குதல்.

## பூங்காவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள பணிகள்

சுவாமி விவேகானந்தரின் முப்பது அடி உயரமான திருவுருவச் சிலையுடன் கூடிய சுவாமி விவேகானந்தர் இல்லம்,
10 சுவாமிஜிக்களின் திருநாமங்களில் அவர்களது திருவுருவ படங்களுடன் மன அமைதிக்கான 10 இல்லங்கள்,
சுவாமி விபுலானந்தர், சுவாமி நடராஜானந்தர், சுவாமி ஜீவனானந்தர் ஆகிய துறவிகளின் 7 அடி உயரமான திருவுருவ சிலைகள்,
அனைவரினதும் மனதைக் கவரும் பூத்துக் குலுங்கும் அழகிய பூங்காவனம்,
நீர் வழங்கலுக்கான நீர் தாங்கியும், கழிவறை வசதிகளும்,
பாரம்பரிய ஆரோக்கிய உணவு, குடிபான வகைகளிற்கான நிலையம்

## பூங்காவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ள பணிகள்


பல விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய சிறுவர் விளையாட்டு பகுதி,
சகோதரி நிவேதிதையின் 6 அடி உயரமான திருவுருவ சிலை,
ஆன்மீக புத்தக விற்பனை நிலையம்,
வாசிகசாலை மற்றும் அலுவலகம்.
கலாச்சார மண்டபம்.

# பூங்கா காணியின் முன்னைய தோற்றம்



# பூங்கா காணியின் தற்போதைய தோற்றம்





## அதிவணக்கத்துக்குரிய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் அவர்களின் ஆசிச்செய்தி

இலங்கைத் திருநாட்டின் மட்டக்களப்பு பகுதியிலே சுவாமி விவேகானந்தரின் திருநாமத்தைப் பறைசாற்றும் வண்ணம் சுவாமிஜி அவர்களின் பிரமாண்டமான திருவுருவச் சிலையுடன், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களின் பெயர்களைக் கொண்ட மண்டபங்களோடு, சுவாமி விபுலானந்தரின் சிலையையும் நிறுவி, மிகுந்த பொருட்செலவில் ஒரு அழகிய பூங்காவை புதுக்குடியிருப்பு சமூக நலன்புரி அமைப்பினர் தயாரித்து தந்திருக்கின்றார்கள்.

இந்தப் பணியின் காரணகர்த்தாவாக திரு.சற்குணேஸ்வரன் அவர்கள் செயல்பட்டு, இந்த புனிதப் பணியை நிறைவேற்றி இருக்கின்றார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். திரு. சற்குணேஸ்வரன் அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சுற்றிவர உள்ள கிராமங்களுக்கு கல்விப் பணிகளில் முழு முயற்சியோடு ஈடுபட்டு வருகின்றார் என்பதையும் அறிந்து உளமாரப் பாராட்டுகின்றேன்.

இத்தகைய இளைஞர்களும், வாலிபர்களும் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களின் மேல் ஆழமான ஈடுபாடு கொண்டு சமூகப் பணிகளில் ஈடுபட்டு நாட்டின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும் என்பதே நம்முடைய அவா.


சுயநலமற்று, மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகத் தம்மைச் சிலர் பலியிட்டே ஆக வேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் உறுதியான கருத்து. இதற்கமைய நாட்டின் வளர்ச்சிக்கும், இளைஞர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வருவதோடு, பெண்களுக்கான திலகவதியார் இல்லம், விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி போன்றவற்றையும் நிறுவி சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருவது எம்மை மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது.

இளைஞர்களும், சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களில் ஊக்கம் பெற்றவர்களும் சமுதாய நலனில் ஈடுபட இந்தப் பூங்கா ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இப் பணியில் உழைத்த சமூக நலன்புரி அமைப்பு அதன் ஸ்தாபகர் திரு. சற்குனேஸ்வரன் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுவாமி விவேகானந்தரின் மாபெரும் திருவுருவச் சிலை திறப்பு விழாவும், பூங்கா திறப்பு விழாவும், அதனோடு ஒட்டி வெளிவர இருக்கும் சஞ்சிகைக்கும் என்னுடைய நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

சுவாமி கௌதமானந்தா,
தலைவர்,
ராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடங்கள்,
பேலூர் மடம், கொல்கத்தா,
இந்தியா.
21.07.2024



## ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜி மகராஜ் அவர்களின்
### ஆசிச்செய்தி

இலங்கையின் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் இயங்கும் "சமூக நலன்புரி அமைப்பு" என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விவேகானந்த பூங்கா, எதிர்வரும் 25.08.2024 அன்று பொதுமக்கள் பார்வைக்காக வைபவரீதியாக திறந்து வைக்கப்பட உள்ளதென அறிந்து மகிழ்ச்சி அடைவதோடு, விழா சிறப்பான முறையில் நடந்தேற இறையருளைப் பிரார்த்திக்கிறோம். இதனையொட்டி வெளியிடப்படும் "விஸ்வரூபம்" என்ற விழா மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியை அனுப்பி மகிழ்கிறோம்.


இப்பூங்காவில், மனதைக் கவரும் வண்ண வண்ண மலர்களோடு, மனதை நல்வழிப்படுத்தும் சுவாமி விவேகானந்தரின் சீரிய சிந்தனைகளும் காட்சிப்படுத்தப்பட உள்ளதென என அறிந்து, இத்தொண்டு நிறுவனத்தின் உன்னத நோக்கத்தை மிகவும் பாராட்டுகிறோம். இத்தகைய பூங்கா இலங்கை மற்றும் உலகின் வேறு எந்தப் பகுதியிலும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை. அந்த வகையில் இப்பூங்கா ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது எனலாம்.

இப்பூங்காவின் எண்ணக்கரு முதலில் இத்தொண்டு நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு சற்குணேஸ்வரன் அவர்களது மனதில் உதித்து, இன்று நிறைவேறியுள்ளதைக் காணும்போது, இதற்காக நீண்ட காலம் உழைத்து இதில் வெற்றி கண்ட திரு சற்குணேஸ்வரன் அவர்களது பக்தி, சிரத்தை, கடின உழைப்பு ஆகியவற்றை நினைத்துப் பெருமைப்படுகிறோம். இவர் தற்பொழுது இலண்டனில் வசித்துக்கொண்டு இக்காரியங்களைச் செய்து வருகிறார் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும், சுவாமி விவேகானந்தர் வழியில் இவர் ஒரு இலட்சிய இளைஞர் என்பதில் ஐயமில்லை. இவரது வழிகாட்டுதலில் ஏற்கனவே பல மக்கட்சேவைப் பணிகள் இலங்கையில் நடந்து வருவதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

திரு சற்குணேஸ்வரன் அவர்களுக்கு சுவாமி விவேகானந்தரின் பூரண ஆசிகள் என்றென்றும் உண்டு எனக் கூறத் தேவையில்லை. அவரது சேவை மென்மேலும் வளர வாழ்த்துவதோடு அவருக்கு இறைவன் நீண்ட ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் அருளப் பிரார்த்திக்கிறோம். இத்தருணத்தில் அவரோடு இணைந்து தங்களது உழைப்பை மகிழ்ச்சியோடு நல்கிவரும் "சமூக நலன்புரி அமைப்பின்" தொண்டர்களுக்கும் எங்கள் இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

இறைபணியில்,
சுவாமி ஆத்மகனானந்தா,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
சென்னை.
22.05.2024



## ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ் அவர்களின்
## ஆசிச்செய்தி

சமூக நலன்புரி அமைப்பு என்ற நிறுவனம் இலங்கையில் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல விதமான பணிகளை செய்து வருகிறது.


அத்துடன் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்காக விவேகானந்த பூங்கா என்ற பெயரில் ஒரு கருத்துப் பூங்கா ஒன்றை உருவாக்கியுள்ளார். பூங்கா அமைத்தல் என்பது தொன்று தொட்டு வரும் பணியானாலும் அதில் பலவிதமான அமைப்புக்களைப் பார்க்கலாம். கோவில் தேவைக்காக அமைக்கப்படும் பூங்கா ஒருவிதம், மக்கள் ஓய்வு நேரங்களில் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பொழுதுபோக்க உதவியாக அமைக்கப்படும் பூங்கா இன்னொருவிதம். விதவிதமான புதிய தாவர வகைகளை காட்சிப்படுத்துவதற்காக உருவாக்கப்படும் பூங்கா வேறொரு விதம். இவ்வாறு பல விதமான பூங்காக்களை நாம் பார்த்திருக்கின்றோம்.

ஆனால் ஒரு கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதை வெளிக்கொணர்வதற்காக அமைக்கப்படும் பூங்காக்கள் தற்காலத்தில் பல இடங்களில் காணப்படுகின்றன. இவை மக்களின் கவனத்தை ஈர்த்து அவர்கள் மனதில் கருத்துக்களை பதிய வைக்கின்றன. முற்காலத்தில் கோவில்களில் உள்ள சிற்பங்களில் மூலமும் ஓவியங்களின் மூலமும் அடைந்த நோக்கம் இக்காலத்தில் இத்தகைய பூங்காக்கள் மூலம் பெறப்படுகின்றன.

விவேகானந்த பூங்காவில் சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர்இ சுவாமி நடராஜானந்தர், சுவாமி ஜீவனானந்தர் போன்ற பல துறவிகளின் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் விவேகானந்தரின் பொன்மொழிகள் பல ஆங்காங்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை வாசிப்பதன் மூலம் இக்கருத்துக்கள் மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. இத்தகைய பூங்கா அமைப்பதன் நோக்கமே அதுதான் என்பது தெரிந்ததே. இதை திறம்பட உருவாக்கிய ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வன் அவர்களது முயற்சி பாராட்டுக்குரியது.

இப் பூங்கா திறப்பு விழாவை முன்னிட்டு “விஸ்வரூபம்” என்ற பெயரில் ஒரு மலர் வெளியிடப்பட இருக்கிறது. மலர் சிறப்பாக அமையவும், பூங்கா வெற்றிகரமாக மக்களைக் கவரவேண்டும் என்றும் சுவாமி விவேகானந்தரது ஆசி அமைப்பாளர்கள் மீது என்றும் இருக்கவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
சுவாமி அக்ஷராத்மானந்த,
தலைவர்,
ராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு.




## ஸ்ரீமத் சுவாமி ராஜேஸ்வரானந்தஜி மகராஜ் அவர்களின்
### ஆசிச்செய்தி

சமூக சேவகர் திரு.க.சற்குசேஸ் வரன் அவர்கள் சுவாமி விவேகானந்தரின் வழியில் மக்களுக்குச் சேவைசெய்து வருவது நாம் அறிந்ததே. இதற்காக அவர் உருவாக்கி 28 ஆண்டுகளாக நடாத்திவரும் SWO நிறுவனத்தின் அடுத்த மைல்கல்லாக விவேகானந்த பூங்கா நிர்மானிக்கப்பட்டுள்ளதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதையொட்டி வெளியிடப்படவுள்ள விஸ்வரூபம் மலருக்கு எனதுவாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிறருக்காகச் செய்யும் சிறு உதவிகூட நம்முள் சிங்கத்தையொத்த ஆற்றலை உண்டுபண்ணும் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். சுயநலமின்றிச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மிகுந்த பலன் அளிக்க வல்லது என்பது அவர்காட்டிய வழியில் சேவைசெய்யும் அனைவரும் உணர்ந்த விடயம். சுவாமிஜியின் எழுச்சிமிகுந்த கருத்துக்கள் தற்காலத்தில் உறங்கிக்கிடக்கும் இளைஞர்களுக்குமிகுந்த அவசியமான மருந்தாகும். அவரது கருத்துக்களை மக்களுக்குக்கொண்டு சேர்க்கும்வவகயில் வெளியிடப்படும் இந்த மலர் உண்மையிலேயே விஸ்வரூபப் பலனைக் கொடுக்கப்போகிறது.

அவ்வகையில் இவ் உன்னதப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அனைவருக்கும் வீரத் துறவி விவேகானந்தரின் அருளாசிகள் கிடைக்க வேண்டுகிறேன். அத்துடன் திரிமூர்த்திகளான பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ர் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் உங்கள்மீது அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வண்ணம்,
இறைபணியில்,
சுவாமி இராஜேஸ்வரானந்தா,
கொழும்பு.
10.07.2024



## ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தஜி மகராஜ் அவர்களின்
### ஆசிச்செய்தி

சுவாமி விவேகானந்தரின் அருட்கருணைக்குப் பாத்திரமான திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களுக்கு, வணக்கம்.

தங்களது சமூக நலன்புரி அமைப்பு Social Welfare Organisation பல ஆண்டுகளாக அமைதியாக, ராமகிருஷ்ண மிஷனின் வழிகாட்டுதலின்படி, புரிந்து வரும் சேவைகளைப் பற்றி அறிந்ததில் ஆனந்தம் மேலிட்டது.

சாதாரண நாட்களில் பிரச்சனைகள் இல்லாத இடங்களில் தொண்டு புரிவது அந்தத் தொண்டினைச் செய்பவருக்கு மட்டும் மகிழ்ச்சியைத் தருகிறது. மாறாக, சிரமமான சூழ்நிலையில், கடினமான இலக்குகளுடன், நியாயமான உரிமைகளுக்காக, மக்களுக்கு அன்பான சேவை ஆற்றும்போது ஆண்டவன் மிகவும் மகிழ்கிறார்.


அவ்வாறு நீங்கள் தொடர்ச்சியாகத் தொண்டாற்றி வருவது என்பதே சுவாமி விவேகானந்தரின் அவரது குருவான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பேரருள் என்பது உணர்வுடையோருக்கு விளங்கும். இந்த உண்மையின் அடிப்படையில் உங்களது சமூக நலன்புரி அமைப்பு செயல்பட்டு வருவதை அறிந்து சிலாகித்து நிற்கின்றோம்.

நீங்கள் அனைவரும் பல காலம் அனுபவித்து வந்த இறைகருணைக்கு ஓர் உருவம் தந்து அதற்கு ஓர் விழா எடுப்பதாகவே இந்த நிகழ்ச்சியை நான் காண்கின்றேன். சுவாமி விவேகானந்தருக்குச் சிலை அமைக்கும்போது நாம் அனைவரின் நிலை மேம்படும் என்பது வரலாற்று உண்மை.

அப்படிப்பட்ட அந்த நிகழ்ச்சி சீரும் சிறப்பும் பெற்று ஸ்ரீலங்காவிற்கே புது வாழ்க்கை, புது உற்சாகம், புது நம்பிக்கை, புது ஆனந்தம் ஆகிய அனைத்தும் நீங்கள் அனைவரும் பெற வேண்டும் என்று இந்த நேரத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பிரார்த்தனை செய்து கொள்கின்றேன்.

நன்றி.

இப்படிக்கு,<br>
சுவாமி விமூர்த்தானந்தர்,<br>
தலைவர்,<br>
ராமகிருஷ்ண மடம்,<br>
தஞ்சாவூர்.<br>
10.07.2024



## ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் அவர்களின்
## ஆசிச்செய்தி

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் **“எல்லா ஆற்றல்களும் உங்களுக்குள் இருக்கிறது. உங்களால் எதையும் செய்ய முடியும் என்பதை நம்புங்கள். நீங்கள் பலவீனர்கள் என்று எண்ணாதீர்கள். எழுந்திருங்கள்! உங்கள் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துங்கள்”**

ஒரு சிந்தனையை வளமாக்கி, உரமாக்கி அதையே தன் வாழ்வின் லட்சியமாக்கிக் கொண்டு, சாதாரண உலகியல் மக்களை விட்டு உயர்ந்த மாமனிதர்களாவதற்கான சிந்தனைகளை விதைத்தவர் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி விவேகானந்தர் பூங்கா என்னும் தொனிப் பொருளில் திரு சற்குணேஸ்வரன் அவர்கள் தன்னுடைய எண்ணத்தில் விளைந்த அற்புதமான கருவினை இன்று நிஜமாக்கி தந்திருக்கின்றார். ஒரு தனி மனிதன் விவேகானந்தருடைய ஆளுமை மிக்க கருத்துக்களால் தூண்டப்படுவதன் மூலமாக எவ்வளவு தூரம் சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்கு ஒரு சான்றாக நம் முன்னே இந்த விவேகானந்தர் பூங்கா திகழ்ந்து கொண்டிருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் மற்றும் அவருடைய பாதையை பின்பற்றி நமது நாட்டிற்கு உழைத்த துறவியர்களின் சிலைகளையும் வடிவமைத்து, பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களுக்கு இடையே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருடைய நேரடி சீடர்களின் பெயர்களை உடைய மண்டபங்களையும் அமைத்து, இன்றைய நவீன சிறார்களுக்கு உத்வேகத்தைக் கொடுக்கும் வண்ணம் இந்த பூங்கா அமைந்திருக்கிறது. சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களையும் அவருடன் தொடர்பு பட்ட சிந்தனைகளைக் கற்றுக் கொள்ளவும் இந்தப் பூங்கா வருங்காலத்தில் உதவும் என்பதில் சந்தேகம் இல்லை.


சமூக சேவை கட்டமைப்பு ஒன்றையும், விவேகானந்தர் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் சிறுமியர் இல்லங்கள், பயிற்சி வகுப்புகள், உயர் கல்விக்கான உதவிகள், பாடசாலைகளுக்கான உதவிகள், வறுமையில் வாழும் மக்களுக்கான உதவிகள் என்று கணக்கில் அடங்காத உதவிகளை திரு சற்குணேஸ்வரன் அவர்கள் ஏற்பாடு செய்து மக்களை தம் குழந்தைகளாக அரவணைத்துச் செல்வது கண்டு பிரமித்து நிற்கின்றோம்.

பல வருடங்களாக தம்முடைய இதயத்தில் ஏந்திய விவேகானந்தர் பூங்கா இன்று திறந்து வைக்கப்படுகின்ற நிலையில், அத்தோடு தொடர்புடையவர்களைக் கௌரவிக்கும் வண்ணமாக ”விஸ்வ‘ரூபம்” என்னும் மலரையும் வெளியிட இருப்பதை எண்ணி மகிழ்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரும் சுவாமி விவேகானந்தரும் தமது கருணையை நிறைக்க பிரார்த்திக்கின்றேன். இந்த விழா மிகவும் சிறப்பாக நடைபெற என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

நன்றி.

இறைபணியில்,
சுவாமி நீலமாதவானந்தர்,
பொது முகாமையாளர்,
ராமகிருஷ்ண மிஷன்,
மட்டக்களப்பு.
17.06.2024



## ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்தஜி மகராஜ் அவர்களின்
## ஆசிச்செய்தி

“மக்கள் சேவையே மகேஷன் சேவை” என்ற அமுத வாக்கிற்கமைவாக, வாழ்ந்து காட்டிய பெருந்தகை வீரத் துறவி சுவாமி விவேகானந்தரின் நாமத்தில், அவருடைய கம்பீரமான திருவுருவச் சிலையுடன் கூடியதாகப் பூங்காவை மேம்படுத்துகின்ற இந்தப் புதிய யோசனைக்காகச் சமூக நலன்புரி அமைப்பின் ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் மற்றும் அமைப்பினைச் சார்ந்த குழுவினருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையில் கடந்த காலங்களில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களும் மற்றும் மாபெரும் மகான்களும் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளனர். இது சுவாமி விவேகானந்தர் மீதும், அவரின் இலட்சியச் சேவைகள் மீதும் அவர்கள் கொண்ட அளவற்ற அன்பும், அர்ப்பணிப்பிற்கும் சிறந்த சான்றாகும்.

இதனடிப்படையில், சுவாமி விபுலானந்த அடிகள் அவதரித்த, இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு பதியினிலே புதுக்குடியிருப்பு என்ற இடத்தில் சமூக நலன்புரி அமைப்பு கடந்த 28 ஆண்டுகளாக வறிய மற்றும் பின்தங்கிய, பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளினை ஆற்றி வருகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அடுத்து, இந்த மாபெரும் நிகழ்வினைப் பிரதிபலிக்கும் முகமாகவும், வரலாற்றில் இதனைப் பதிவு செய்யும் முகமாகவும் வெளியிடப்படும் “விஸ்வரூபம்” நூல் வெளியீட்டிற்கான எனது முழு மனதுடனான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தப் பூங்கா முற்று முழுதாக உத்வேகத்தின் சிறந்த ஆதாரமாக இருக்கும் என்றும், சுவாமி விவேகானந்தரின் உணர்வுகனை உள்ளத்தாலுணர்ந்து, அவருடைய மகத்தான சிந்தனைகளைச் செயற்படுத்த அனைவருக்கும் உதவும் என உறுதியாக நம்புகின்றேன்.

தொடர்ந்தும், இனி வருகின்ற எல்லாக் காலங்களிலும் சமூக நலன்புரி அமைப்பினரின் பொதுப் பணிகள் சிறக்கவும், அவை விஸ்வ‘ரூப வளர்ச்சியினை எட்டவும், அதன் சேவைகளால் மக்கள் சமூகத்தினரின் வாழ்வு நல்வாழ்வாக அமையவும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும், தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரும், சுவாமி விவேகானந்தரும் தங்களுடைய அருளாசிகளினை வழங்கட்டும் என வாழ்த்தி, எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

சுவாமி சுரார்ச்சிதானந்தர்,
உதவி பொது முகாமையாளர்,
ராமகிருஷ்ண மிஷன்,
மட்டக்களப்பு.



**மாவட்ட அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி**

சமூகநலனை நோக்காகக் கொண்டு கடந்த 28 வருடங்களாக மக்களுக்காக பணியாற்றி வரும் சமூக நலன்புரி அமைப்பின் மற்றொரு முயற்சியான விவேகானந்த பூங்கா திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள “விஸ்வரூபம்” சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

பல்வேறுபட்ட இன்னல்களுக்கு மத்தியில் மனம் சோர்வடைந்து மகிழ்வை கொஞ்சம் கொஞ்சமாக நழுவவிட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் மனதை ஒருமுகப்படுத்தி எமது மழலைச் செல்வங்களுடன் நாமும் மழலையாக மாறி மகிழ்வடைவதற்கான இடமாக பூங்காக்கள் அமைகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக விவேகானந்த பூங்கா அமையும் என்பதில் ஐயமில்லை. அதனை மேலும் சிறப்பாக்கவும் அதன் விஸ்வ'ரூபத்தினை வெளிக்காட்டவும் “விஸ்வரூபம்” மலரையும் வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

சமூக நலன்புரி அமைப்பின் மனிதாபிமான, சமூக நலச் செயற்பாடுகளையும் தாங்கி வரும் இந்த “விஸ்வரூபம்” மலர் வெளியீடு சிறப்புற அமைய, முன்நின்று உழைக்கும் அமைப்பின் ஸ்தாபகர் உட்பட மலர் வெளியீட்டுக் குழுவினர் அனைவரையும் இந்த இடத்தில் பாராட்டுவதுடன் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

திருமதி.ஜே.ஜே.முரளிதரன்,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.



### பிரித்தானியாவில் இருந்து நிறுவன ஸ்தாபகரின் செய்தி

நமது மட்டக்களப்பு மாவட்டத்தில் கள்ளிமுள் காடாக இருந்த மூன்றரை ஏக்கர் பரப்புக் காணி பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் என் உள்ளத்தில் ஏற்படுத்திய தூய சிந்தனையால் இன்று முழு மக்களையுமே கவரக் கூடிய புனிதத் துறவிகளின் புகழ் பாடுகின்ற ஒரு புனித பூங்காவாக மாறியிருப்பதனை காண்கின்றோம்.

ஒரு சாதாரணமான மனிதன் சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றி வாழ்க்கையில் எந்தளவு உயர முடியும், எந்தளவு ஆக்கபூர்வமான பணிகளையெல்லாம் செய்யமுடியும் என்பதனை என் வாழ்க்கையில் நான் நன்கு உணர்ந்துள்ளதோடு, அந்த பாதையில் வெற்றியும் பெற்றுள்ளேன். ஆதலால் அவரது சிந்தனைகள் நமது இளைய சமுதாயத்தை போய் சேரவேண்டும் என்று விரும்புகின்றேன்.

சுவாமி விவேகானந்தரது சிந்தனைகள் எனது இளைமைக் காலத்தில் என் உள்ளத்தில் ஏற்படுத்திய ஒரு பெரும் தாக்கத்தின் காரணமாக 1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது SWO அமைப்பானது கடந்த 28 ஆண்டுகளாக அளவற்ற மக்கள் சேவையினை முன்னெடுத்து வருகின்றது.

இவ் அமைப்பினால் மக்கள் பாவனைக்காக திறக்கப்படுகின்ற “விவேகானந்த பூங்கா” மக்களை மகிழ்விக்கின்ற ஒரு இடமாக மட்டுமல்லாது, சுவாமி விவேகானந்தரது உன்னத சிந்தனைகள் மக்களை சென்றடைந்து அவர்களை சமுதாய உணர்வு மிக்கவர்களாக மாற்றுகின்ற ஒரு இடமாகவும், மக்கள் சேவைக்காக தம் வாழ்கையை அர்ப்பணித்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உன்னதமான துறவிகளின் புகழ் பாடுகின்ற ஒரு இடமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

உலகமெங்கும் நாளுக்கு நாள் விஸ்வரூபம் எடுத்துவரும் சுவாமி விவேகானந்தர் கோடானகோடி ஏழை மக்கள் பசியிலும், அறியாமையிலும் மூழ்கியிருப்பதனை பார்த்து மனமுருகி அவர்களை உயர்த்துவதே தன் வாழ்வின் இலட்சியம் என ஒரு திடசங்கல்பத்தை பூண்டு அதற்காக தன் முழு வாழ்வையுமே அர்பணித்தவர்.

தான் தொடங்கிவைக்கும் தன்னலமற்ற மக்கள் பணியினை முன்னெடுத்துச் செல்ல அன்பும், சேவையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் முன்வர வேண்டுமென உலகம் முழுவதையுமே பார்த்து அறைகூவல் விடுத்தார். அவரது உண்மையான அறைகூவல் வீண்போகவில்லை.

அவர் எதைப் பெரிதும் விரும்பினாரோ, எதற்காக தன் முழு வாழ்வையும் அர்பணித்தாரோ அதனை செய்வதே அவருக்கு நாம் அனைவரும் கொடுக்கின்ற ஒரு உண்மையான உயர்ந்த வழிபாடாகும்.

எமது ஸ்தாபனம் கடந்த 28 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்ற தன்நலமற்ற சேவைகளுக்கெல்லாம் சுவாமி விவேகானந்தரே மூலகாரணமாக இருக்கின்றார். அதனால்தான் அவரை முன்னிலைப்படுத்தி எமது பணிகளையெல்லாம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம்.

இப் பூங்கா பணிக்காக நன்கொடைகள் வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, திறப்பு விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்,
சமூகப் பணியில்,
க.சற்குணேஸ்வரன்,
தலைவர்,
SWO –UK



## நிறுவன தலைவரின் செய்தி

மகத்தான செயல்களைச் செய்வதற்கான இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உன்னத மனிதனே எமது நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.சற்குணேஸ்வரன் அண்ணன் ஆவார். இவர் பள்ளிப்பருவத்திலேயே சுவாமி விவேகானந்தரைக் கற்று மனிதகுலத் தொண்டை வளர்க்க தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர்.

கடந்த 28 வருடங்களுக்கு முன்னர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிர்கதியான மக்களுக்கு உதவி செய்வதற்காக சமூக நலன்புரி அமைப்பு என்ற சமூகத்தொண்டு நிறுவனத்தை நிறுவினார்.

இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தன்னலம் கருதா உதவிகளை வழங்கியதுடன் இவரினால் உருவாக்கப்பட்டதே பழுகாமம் திலகவதியார் இல்லம் இதற்காக இன்று வரை தன்னாலான தன்னிகரற்ற பங்களிப்பினை வழங்கி வருகின்றார்.

எண்ணங்களுக்கேற்ப நாம் உருவாகின்றோம் என்றும் விவேகானந்தரின் கருத்திற்கிணங்க சிறப்பான நல்ல எண்ணங்களை தன்னகத்திற்கொண்டு தெய்வத்திருமூவரினை ஆழமாக நேசிப்பதன் வெளிப்பாடாகவே இந்த அரிய செயல்களைச்செய்ய முடிகின்றது. ஏன்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

இவரின் இந்தக்காரியங்களினால் ஏழைகள் பலரும் வாழ்வாதார வழிகளில் முன்னேற்றப்பட்டுள்ளனர். மேலும் காலத்திற்கெற்ப கற்றலும் அதனூடாக தொழில்சார் பயிற்சிகளும் பலவழிகளில் வழங்க வேண்டும் என்பதற்காகவே இவரின் சிற்தனையில் உதித்ததே புதுக்குடியிருப்பு விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி 12 வருடங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு வரப்பிரசாதகமாக காணப்படும் இக்கல்லூரி மூலம் எண்ணற்ற மாணவர்களை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொண்டு வருகின்றனர்.

இவருடைய சிந்தனையில் இத்தகைய நல்லெண்ணங்களுள் ஒன்றாக உதித்ததே விவேகானந்த பூங்கா இவருக்கு இத்தகைய சிந்தனை தோன்றிய போது இதற்கான இடம் கூட இல்லை. எவ்வளவோ தடைகள் வந்த போதும் தன்னுடைய வரம்பில்லா வலிமையினால் இன்று இத்தகைய அற்புத செயலை நிறைவேற்றியுள்ளார். இதற்காக அயராது பாடுபட்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு நீண்ட ஆயுளையும் நோயற்ற தேக ஆரோக்கியத்தினையும் எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும் என பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

திருமதி. தயனி கிருஷ்ணாகரன்,
தலைவர்,
சமூக நலன்புரி அமைப்பு,
புதுக்குடியிருப்பு.



**பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி**

ஸ்ரீ இராமகிருஸ்ண பரமஹம்சரின் ஆன்மீகச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட சுவாமி விவேகானந்தர், இந்துமத ஆன்மீகத்தை உலக அரங்கில் நிலைநிறுத்திய மிகப்பெரும் ஆன்மீகத் துறவி. இளைஞனாக இருக்கும்போதே ஆன்மீகத்தில் ஈடுபட்டவர். உலகம்பூராகவும் வலம்வந்து, தான் வாழ்ந்த சமுதாயத்திலிருந்து பெற்றுக்கொண்ட வாழ்க்கை அனுபவங்களால் ஆன்மீகத்தை புரிந்துகொண்டவர். அவரது சிந்தனைகள் இளைஞர்கள் மத்தியில் உத்வேகத்தையும் புத்தெழுச்சியையும் உண்டுபண்ணுபவையாகக் காணப்படுகின்றன. அவரது சிந்தனைவழிவந்த பலர் சமூகத்திற்கு சேவையாற்றியுள்ளனர். பலர் தலைவர்களாகவும், ஆன்மீகவாதிகளாவும், சமூக சேவையாளர்களாகவும், உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். அவர்களால் ஒட்டுமொத்த உலகும் பல பயன்களைப் பெற்றுவருகின்றது.

நமது நாட்டில், சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளால் கவரப்பெற்ற பலர் பல்வேறு துறைகளிலும் பணியாற்றுகின்றனர். அவர்களிலே திரு.க.சற்குணேஸ்வரன் அவர்கள் ஒருபடி மேலே சென்று சுவாமி விவேகானந்தரின் பெயரால் பல்வேறு சமூக நலன்புரி சார்ந்த தொண்டு நிறுவனங்களை நிறுவி, அவற்றினூடாக சமுதாயத்தின் வறுமை நிலையை மாற்ற செயலாற்றி வருகின்றார். ஆன்மீகவாதிகள் வறுமை நிலை பற்றிச் சிந்திக்காத ஒரு காலத்திலே ஆன்மீகத்தினூடாக வறுமை நிலையை மாற்றவேண்டும் என்று சிந்தித்து செயலாற்றியவர் சுவாமி விவேகானந்தர். அவரது சிந்தனைகளை மிக ஆழமாக புரிந்து கொண்டதன் விளைவாகவே திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களும் தனது பணியை சமூக நலன்புரி சார்ந்து ஈடுபடுத்தியுள்ளார் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஒருவர், ஒரு நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் அதன் மேலாளராகவும் இருந்துகொண்டு செயலாற்றுவது இலகுவான காரியமல்ல. அது வருமானம் ஈட்டும் நிறுவனமாயிருப்பின் அதனை எப்படியேனும் நிலை நிறுத்த முயற்சி செய்வர். ஆனால் சமூக நலன்புரி அமைப்பு மட்டக்களப்பு மற்றும் லண்டன் என இயங்குகின்ற இவ்வமைப்பு பொதுப்பணியை இலக்காகக்கொண்ட தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். அவை வருமான நோக்கற்றவை. அவற்றை சுமார் 28 வருடங்களாக இயக்கிவருவதென்பது சாதாரண காரியமல்ல. எல்லோராலும் செய்யக்கூடியதுமல்ல. அவ்வாறான ஒரு பணியை முன்னின்று நடத்திவருகின்ற திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களும் அவருக்கு துணைபுரிகின்ற தொண்டர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

அந்நலன்புரி அமைப்பின் ஓர் அங்கமாக திறப்பு விழா காணவிருக்கின்ற விவேகானந்த பூங்கா தாங்கள் எதிர்பார்க்கும் மனமகிழ்வை மக்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும் என்று வாழ்த்துவதுடன் சமூக நலன்புரி அமைப்பின் கீழ் இயங்கும் மற்றைய தொண்டு நிறுவனங்களும் அதே மகிழ்வையும் நம்பிக்கையையும் மக்கள் மனதில் ஏற்படுத்தவேண்டுமென்று உள்ளம் மகிழ்ந்து, விவேகானந்த பூங்கா திறப்பு விழாவை நினைவுகூர்ந்து வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வெய்துகின்றேன்.
தங்கள் பணி மேன்மேலும் சிறக்க எனது நல்வாழ்த்துகள்.

நன்றி.

திருமதி தெட்சணகௌரி தினேஷ்,
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று,
ஆரையம்பதி.



## பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி

எழுமின்! விழிமின்! உழைமின்!

என அறைகூவல் விடுத்த வீரத்துறவி விவேகானந்தரின் பெயர் தாங்கி, மீன்பாடும் தேன் நாடாம் மட்டுமா நகரிற்கு மணிமகுடமாக விளங்க இருக்கும் விவேகானந்த பூங்கா திறப்பு விழாவினை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வி, சமூக, சமய, பொருளாதார செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி, தனித்துவமானதும் ஆக்கபூர்வமானதுமான பணிகளை முன்னெடுத்து வரும் நிறுவனமாக சமூக நலன்புரி அமைப்பு 28 வருடங்களாக எமது பிரதேசத்தில் மாத்திரமின்றி மாவட்ட ரீதியாகவும் சேவையினை வழங்கி வருகின்றது என்பது நிதர்சனமானது.

சமூக நலன்புரி அமைப்பு நிறுவனத்தின் தொடர்செயற்பாடாக விவேகானந்த பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இப் பூங்கா அமைந்துள்ள இடமானது அண்மையில் கிழக்கு மாகாணத்தின் முதலாவது சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட குருக்கள்மடம் ஏத்தாளைக்குளத்திற்கு அருகாமையில் அமையப் பெற்றிருப்பதும் இரம்மியமான சூழல் அழகிற்கு மேலும் வலுச் சேர்த்து நிற்கின்றது.

இப்பூங்காவின் இயற்கை வனப்பை சிறுவர்கள் மட்டுமன்றி அனைவரும் புத்துணர்வுடன் அனுபவிக்கக்கூடிய இடமாகவும், சூழல்சார் கற்றலுக்குரிய பிரதேசமாகவும் விளங்கும் என்பதுடன், சுற்றுலாப் பயணிகளையும் கவர்கின்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகவும் எதிர்காலத்தில் திகழும். மேலும் சுவாமி விவேகானந்தரின் சமூகத்தை மாற்றி அமைக்கும் சக்தி வாய்ந்த செய்திகளை அனைவருக்கும் கடத்தி அறிவு, திறன் மற்றும் ஆன்மீக மேம்பாட்டு ஸ்தலமாகவும் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

விவேகானந்த பூங்கா வில் அமையப்பெற்றுள்ள சுவாமி விவேகானந்தரின் பிரமாண்டமான, எழுச்சிமிக்க திருவுருவ சிலையினை கடந்து செல்லும் அத்தனை இளைஞர்களையும் அவரது வீர முழக்கமும், பேதங்களை கடந்து ஒன்றுபட்ட உணர்ச்சியும், உலக நன்மை என்னும் பரந்துபட்ட சிந்தனையும் ஆட்கொண்டு நலம் பெறுவர் என்ற நம்பிக்கையும் ஏற்படுகின்றது.

காலத்தால் அழியாத உன்னத பணியான விவேகானந்தர் பூங்கா திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவருகின்ற **"விஸ்வரூபம்"** மலரானது சமூக நலன்புரி அமைப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளையும், விவேகானந்தா பூங்காவின் உருவாக்கத்தையும், மகத்தான காரியங்களை மகத்தான தியாகங்களால் சாதிக்க முடியும் என்னும் சுவாமியின் கூற்றுக்குச் சான்றாக விளங்கும் இந் நிரூபணத்தினையும் அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் ஆவணமாக வெளிவருகின்றது என்பது திண்ணம். இத்தகைய உன்னதமான பணிகளை தொடர்ந்தும் இவ் அமைப்பானது மேற்கொள்ள வேண்டும் எனவும் இவ் வரலாற்று சிறப்புமிக்க பணியினை செயற்படுத்திய அனைவர் மீதும் இறையாசி கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

**"இலட்சியப் பாதையை வகுத்த சுவாமி விவேகானந்தரின் ஆசிகள் வண்ண பூக்களிலும், வனப்பு மிக்க சூழலிலும் மலர்ந்து, மணம் வீசி அனைவர் மீதும் நம்பிக்கை ஊற்றாக பொழியட்டும்"**

திருமதி சிவப்பிரியா வில்வரத்னம்,
பிரதேச செயலாளர்,
மண்முனை தென் எருவில்பற்று,
களுவாஞ்சிக்குடி.



**பட்டிருப்பு வலய கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி**

சமூக முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு இடம்பெறும் விவேகானந்த பூங்கா திறப்பு விழாவில் இடம்பெறும் விஸ்வரூபம் நூல் வெளியீட்டிற்காக வாழ்த்துரை வழங்குவதில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியிலும் பட்டிருப்பு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற ரீதியிலும் பெருமை கொள்கிறேன்.

சுயநலம் என்பதனை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள் என்னும் சுவாமி விவேகானந்தரது கூற்றிற்கு ஏற்ப கடந்த மூன்று தசாப்த காலமாக தன்னலமற்ற சேவையினை சமூகத்திற்காக வழங்கி வரும் நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு.க.சற்குனேஸ்வரன் அவர்களுக்கு எமது கல்விச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், வண்ண மலர்கள் மட்டுமல்லாது உங்கள் ஒவ்வொருவரிலும் உலகத்தையே அசைக்கும் அளவு வலிமையுள்ளது என்னும் சுவாமிகளது பொன்மொழிக்கு அமையவும் மக்கள் மனதில்சமுதாய உணர்வினை தூண்டும் நோக்கிலும் அவரது சிந்தனைகளும் காட்சிப்படுத்தப்பட்டு விவேகானந்த பூங்கா திறக்கப்படுவதானது மிகச் சிறந்த விடயமாகும்.

அந்த வகையில் பூங்காவினை வடிவமைப்பதற்கும் விஸ்வரூபம் நூல் வெளியீட்டிற்கும் சகல வழிகளிலும் தங்களுக்கு உதவியாக இருந்த தங்களது பணிக் குழுவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு தங்களது சமூகப்பணி மென்மேலும் வளரவேண்டும் என இறைவனைப் பிரார்த்திகின்றேன்.

நன்றி

திரு.செ.புவனேந்திரன், (SLEASI)
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
கிழக்கு மாகாணம்,
மற்றும்
பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்,
களுவாஞ்சிக்குடி



**களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியாசாலை வைத்திய அத்தியட்சகரின் வாழ்த்துச்செய்தி**

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் மக்கள் சேவையே மகேசன் சேவை என்கின்ற கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டு 1996ஆம் ஆண்டு திரு.க.சற்குணேஸ்ரன் எனும் தனி மனிதன் உள்ளத்தில் உதிர்த்த காத்திரமான சிந்தனையின் வெளிப்பாடாக தோற்றம் பெற்றதே சமூக நலன்புரி அமைப்பு எனும் அமைப்பாகும் இவ்மைப்பின் ஊடாக பல்றேபட்ட சமூக சேவைகள் இடம் பெற்றுகொண்டு வருவதனை நான் நன்கு அறிவேன்.

இற்றைக்கு 28 வருடங்கள் கடந்தும் தனது காருண்ய சிந்தனைகளின் அடிப்படையில் ஏழை மாணவர்கள் பயன்பெறும் நோக்கில் விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி நிறுவப்பட்டு இன்றுவரை பல மாணவர்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தொழிநுட்பவியல் சார் தொழில்கள் புரிவதற்கு ஓர் ஆதாரமாக விளங்கி வருகின்றது. மேலும் ஆதரவற்ற மற்றும் ஏழை மாணவர்களின் எதிர்காலம் கருதியும், கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும் திலகவதியார் மகளிர் இல்லம் - திருப்பழுகாமம், திலகவதியார் மகளிர் இல்லம் - வாகரை, அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் - முல்லைத்தீவு என்பன செயற்பட்டு வருகின்றன.

அத்தோடு சமூக நலன்புரி அமைப்பின் மற்றுமொரு சிந்தனையின் வெளிப்பாடாக புதுக்குடியிருப்பு கிராமத்தில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியை அண்மித்த பகுதியில் 30அடி உயரம் கொண்ட பிரமாண்டமான சுவாமி விவேகானந்தரின் சிலையினை மையமாக கொண்டு பல வண்ண பூஞ்செடிகள் பூத்துக்குலுங்கி அழகு சேர்க்கும் வகையில் விவேகானந்த பூங்கா எனும் பெயர்நாமத்தில் நிர்மானிக்கப்பட்டு பரிபாலனம் செய்யப்பட்டுவருகின்றது. ஈழத்தில் அதிஉயரமான விகோனந்தர் சிலை என்கின்ற பெருமை இப்பூங்காவின் சிறப்பிற்கு மேலும் வலுவூட்டுகின்றது.

28 வருடங்களுக்கு முன்னதாக தனி ஓர் மனிதனால் முன்னெடுக்கப்பட்ட சிறு முயற்சி படிப்படியாக வளர்ச்சி கண்டு இன்று பன்முகப்பார்வை கொண்டு விஸ்வரூபமெடுத்திருப்பது இந்நிறுவனத்தின் ஸ்தாபகர் அடங்கலான குழுவினரின் கடின உழைப்பினையும் மக்கள்சேவையின் மகத்துவத்தினையும் எமக்கு உணர்த்துகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் எதிர்வருகின்ற 25.08.2024 திகதியன்று பொதுமக்களின் பார்வைக்காக உத்தியோகபூர்வமாக இப்பூங்கா திறந்துவைக்கும் நிகழ்வுவின்போது ஸ்தாபகரின் நீண்டநாள் கனவிற்கும், நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பொருந்தும் வகையில் “விஸ்வரூபம்” எனும் பெயரில் மலர் வெளியிடுவது சாலப்பொருந்துவதாக எண்ணுகின்றேன்.

விஸ்வரூபம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு எனது உள்ளம் உவகை கொள்கின்றது. தொடர்ந்தும் இவ் அமைப்பின் ஊடாக மேலும் பல சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு மக்களிடத்தில் சென்றடையவேண்டும் என இறைவனை பிராத்தித்துக்கொள்கின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்,
Dr.க.புவனேந்திரநாதன்,
வைத்திய அத்தியட்சகர்,
ஆதார வைத்தியசாலை,
களுவாஞ்சிக்குடி.



**ஸ்ரீ சத்திய சாயி சஞ்ஜீவனி வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரின் வாழ்த்துச்செய்தி**

இலங்கையில் சமூக நலன்புரி அமைப்பானது (Social Welfare Organization Sri Lanka -SWO) மட்டக்களப்பில் விவேகானந்த பூங்காவை திறந்து வைப்பதையிட்டு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். இந்த அமைதியான இடத்தில் ஆன்மிகம் கலந்த இச்சூழல் அனைவருக்கும் உடல், மன ஆரோக்கியத்துக்கு பெரும் உதிவியாக இருக்கும்.

சுவாமி விவேகானந்தரின் உயரிய கருத்துக்கள் இவ்விடத்தில் வரும் இளைஞர்களின் வாழ்வை மேலும் உயர்த்தும் என்று நம்புகின்றேன்.

SWO அமைப்பு இளைஞர்களுக்கும் வசதியற்றோர்க்கும் கல்வியை வழங்கி அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஈட்டி தருவதன் மூலம் மிகப்பெரிய சமூக ஆன்மிக பணியை மேற்கொண்டு வருவது மிகவும் பாராட்டுவதற்கு உரியதாகும்.

இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் மற்றும் பிற மத தலைவர்களின் ஆசிர்வாதம் உங்கள் அமைப்பை மேல் மேலும் வளர உதவி செய்யும்.

உங்கள் இந்த சிறந்த முயற்சிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி,

Prof. K.T. Sundaresan MBBS, MD, FRCP (Edin)
Medical Superintendent
Sri Sathya Sai Sanjeevani Hospital, Kirankulam, Batticaloa
Professor in Medicine FHCS, EUSL
Specialist Physician in Internal Medicine
University Medical Unit
Teaching Hospital, Batticaloa



**பிரதேச சபை செயலாளரின் வாழ்த்துச்செய்தி**

இலங்கைத் திருநாட்டில் அந்நியராட்சி இடம்பெற்ற காலகட்டம் சைவமும் தமிழும் நமது சமூகத்திலிருந்து விலகிச் செல்லும் சூழ்நிலை. இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியாவிலும் கூட இப்பாரிய சவாலை இந்துமக்கள் எதிர்நோக்கிய காலப்பகுதியில் அவதார புருஷரான சுவாமி விவேகானந்தர் அவர்களால் ஆற்றிய சேவைகள் அளப்பரியது.

அந்த வகையில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனையில் உருவான நல்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நிறுவன ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களினால் பல்தரப்பட்ட சேவைகள் மக்களுக்கு ஆற்றப்பட்டுவருகின்றது.இதன் பிரகாரம் இவ்வமைப்பினால் இன்று மக்கள் பாவனைக்காக திறக்கப்படுகின்ற விவேகானந்த பூங்கா வானது எமது பிரதேசத்திற்குட்பட்டு அமைந்திருப்பது எங்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமே.

இது இப்பகுதி மக்களை ஆரோக்கியம் நிறைந்த மனமகிழ்ச்சியினை ஏற்படுத்தும் இடமாக அமையும் என்ற நம்பிக்கையுடன் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

திரு.ஜோ.சர்வேஸ்வரன்,
செயலாளர்,
பிரதேச சபை,
மண்முனைப்பற்று.



**பேராசிரியர் திரு.மா.செல்வராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி**

விவேகானந்த பூங்கா திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள விஸ்வரூபம் மலருக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். சமூக நலன்புரி அமைப்பின் ஸ்தாபகரான எனது மாணவன் திரு.க.சற்குணேஸ்வரன் இப்பூங்கா திறப்பு விழாவிற்கு வருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

சிவானந்த வித்தியாலத்தில் கற்கும் போதே திரு.க.சற்குணேஸ்வரன் சுவாமி விவேகானந்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். விவேகானந்தரின் பொன்மொழிகளை பேப்பரில் எழுதி தனது நண்பர்களுக்கு வழங்கி வந்தார். சுவாமி விவேகானந்தரிடம் அவர் கொண்ட ஈடுபாடு இன்று பெரு விருட்சமாக வளர்ந்துள்ளதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். புதுக்குடியிருப்பில் விவேகானந்த தொழிநுட்பக் கல்லூரியை நிறுவினார். கல்வி அமைச்சினுடைய பாடத்திட்டத்தை அமுல்படுத்தி பலநூறு மாணவர்களுக்கு வழிகாட்டி வருகின்றது அந்நிறுவனம்.

பழுகாமத்திலும், வாகரையிலும், முல்லைத்தீவிலும் இல்லங்களை நிறுவி நடாத்தி வருகின்றார். வசதியற்ற மாணவ மாணவிகளுக்குப் பெருந் தொண்டாற்றி வருகின்றது இந் நிறுவனங்கள். மாணவ மாணவிகளை வலுப்படுத்துவதில் இந் நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. விவேகானந்தரின் பொன்மொழிகளை இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்து உலகிலுள்ள விவேகானந்த பக்தர்கள் படித்து பயன் பெறும் வண்ணம் வழிவகை செய்துள்ளார்.

திரு.க.சற்குணேஸ்வரன் தான் கொண்ட கொள்கையில் விடாப்பிடியாக இருந்து செயல்பட்டு வருபவர். எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் அவை எல்லாவற்றையும் தாண்டி இப்பயனுள்ள தொண்டை தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றவர். நமது மாணவ மணிகளுக்கு திரு.க. சற்குணேஸ்வரன் ஒரு வழிகாட்டியாவார். இவர் மட்டக்களப்பு பெற்றெடுத்த அருந்தவப் புதல்வராவார். இவரைப் போன்ற சிலர் இருப்பார்களானால் நமது பிரதேசம் மேலும் மேலும் உயர்ந்து செல்லும் என்பதில் ஐயமில்லை.

சிறுவயதிலேயே ஒரு பெரும் உண்மையை அறிந்துகொண்டார் சற்குணேஸ்வரன். அதாவது விவேகானந்தர் தான் வருங்கால இளைஞர்களுக்குச் சிறந்த மிகப்பொருத்தமான வழிகாட்டி என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. இவ்வளவு நீண்ட காலமாக திரு.க.சற்குணேஸ்வரன் கொண்ட கொள்கையில் பிடிவாதமாக இருந்து வருவதையிட்டு அவரது ஆசிரியர் என்ற வகையில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். கொள்கைப்பிடிப்புள்ள இப்படி ஒருவரைக் காண்பது அரிது. அவரது கொள்கையின் பின்புதான் தனது குடும்பம் பிள்ளைகள் எல்லாம். இவர் ஓர் ஆச்சரியப்பிறவி.

இவர் உருவாக்கிய விவேகானந்த பூங்கா மட்டக்களப்பில் ஓர் அழியாத சின்னமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. சற்குணேஸ்வரன் உடல் நலத்துடன் நீண்ட ஆயுளுடனும் வாழ்ந்து இறைதொண்டைத் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். சற்குணேஸ்வரனின் தொண்டு வாழ்க, வளர்க.

நன்றி.

பேராசிரியர்.மா.செல்வராஜா
வேந்தர்,
**கிழக்கு பல்கலைக்கழகம்.**



**சிரேஷ்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தரின் வாழ்த்துச்செய்தி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1996 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பானது ஆயிரக்கணக்கான சிறுவர்களின் உடல் ஆரோக்கியம், கல்வி வளர்ச்சி, ஒழுக்கம், சமூக கலாச்சார விழுமியங்களை பேணி வருவதுடன் பல சிறுவர்களை சமூகத்தில் உயர்ந்த நிலையில் உருவாக்கியுள்ளமை அவர்களின் வெளிப்படுத்துகைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இச் சமூக நலன்புரி அமைப்பின் செயற்பாடானது இப் பிரதேசத்தில் மட்டுமன்றி முழு நாட்டிற்கும் சர்வதேச ரீதியிலும் அதன் செயற்பாடானது விரிவுபடுத்தப்பட்டு பல்வேறு சேவைகளை வழங்கி வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான நிலையில் தான் இன்று உலகமே வியக்கத்தக்க வகையில் அழகான "விவேகானந்த பூங்கா" வை அமைத்து சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை உளமகிழ்வோடு ஆரோக்கியமான பொழுதுபோக்கினையும், உடல் ஆரோக்கியத்தையும் பெறும் முகமாக இப்பெருங்காரியத்தை உருவாக்கித் தந்திருக்கும் இச் சமூக நலன்புரி அமைப்பினை வாழ்த்துவதுடன் இதன் நற்பணிகள் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!

திரு.எஸ்.சிவகுமார்,
சிரேஸ்ட நன்னடத்தை அதிகாரி,
சிறுவர் நன்னடத்தை பராமரிப்புச் சேவைத் திணைக்களம்,
மட்டக்களப்பு.



### அவுஸ்ரேலியாவில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி

அவுஸ்திரேலியா மகளிர் இல்லம் சார்பாக விவேகானந்த பூங்கா தொடக்கவிழா தொடர்பான வாழ்த்துச்செய்தியினை தெரிவிப்பதில் பெருமகிழ்வும் பெருமிதமும் கொள்கிறேன்.

அவுஸ்திரேலியா மகளிர் இல்லமானது இலாப நோக்கமற்ற ஒரு தொண்டு நிறுவனமாகும். 2008 ம்ஆண்டு முதல் எமது இந்த நிறுவனம் மட்டக்களப்பு சமூக நலன்புரி அமைப்புடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகும். எமது நிறுவனத்தின் குவிய நோக்கு திலகவதியார் மகளிர் இல்லத்தில் வசிக்கின்ற சிறுமியர்களுக்குரிய தேவைகளைப் பூரணமாக வழங்குதலும், அவர்களுக்கு பாதுகாப்பானதொரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்துலுமே.

திருப்பழுகாமத்தில் சமூக நலன்புரி அமைப்பு நிறுவுதலில் திரு.க.சற்குனேஸ்வரன் அவர்கள் காட்டிய தீவிர ஆர்வம் 1996ம் ஆண்டு தொடக்கம் நாம் அறிவோம். சென்ற தடவை நான் மட்டக்களப்பிற்கு வந்திருந்தவேளை விகோனந்த பூங்கா தொடர்பான பெருந்திட்டம் பற்றி அறிந்து கொண்டதோடு அதன் துரித முன்னேற்றங்கள் நேரில் பார்த்தும் மகிழ்ந்தேன். திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாகவிருக்கும் மேற்படி நிறுவனத்தோடு தொடர்புடைய அனைத்து உறுப்பினர்களுக்கும் அவர்தம் ஆறாத முயற்சிக்கு எமது உளங்கனிந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும். எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பொது மக்கள் பாவனைக்கு விவேகானந்த பூங்கா திறக்கப்படும்.

இளைஞர்கள் ஆக்க சக்தியும் அந்த ஆக்கசக்தியை உற்சாகத்துடன் செயற்படுத்தும் ஊக்க சக்தியும் கொண்டவர்கள் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் சுவாமிகள். அவர் வாழ்ந்த காலத்தில் இளைஞர்களுக்கு அவர்தம் சக்தியை அவர்களுக்கு புரிய வைத்து “எழுமின் விழுமின் குறிக்கோளை அடையும் வரை நில்லாது உழைமின்” என உபதேசித்து வெற்றியும் கண்ட ஒரு உதாரண புருஷர் ஆவர். சமூக நலத்துக்காக உழைத்து வெற்றி காணும் திறன் இளைஞர்கள் ஒவ்வொருவருள்ளும் உள்ளது. இந்த விவேகானந்த பூங்காவினூடாக இளையதலைமுறையினரது உடல், உள ஆன்மீக பலம் அதிகரிக்க சுவாமி அவர்களின் உபதேசங்கள் வழிவகுக்கும் என நம்புகின்றோம்.

சமூக நலன்புரி அமைப்பிற்குச் சொந்தமான $3^{1/2}$ ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள 30 அடி உயரமான சுவாமி விவேகானந்திரின் திருவுருவச் சிலையின் நிழற்படம் கண்டு அகமகிழ்ந்கிறேன். நேரில் இந்த சிலையினை சீக்கிரமே காண்பதற்கு எனக்கு இறையருள் கிடைக்க இறைவனை வேண்டுகிறேன்.

இவ்வாறான மேலும் பல அபிவிருத்தி திட்டங்கள் தங்களது பெரு முயற்சியுடன் தொடரவேண்டுமெனவும் அதற்கான முயற்சிக்கு எமது ஒத்துழைப்பு தொடருமெனவும் கூறி வாழ்த்துகிறேன்.

நமது பணி தொடர்க. வாழ்க வளமுடன்.

நன்றி.

திரு.பொ.வரதராஜன்,
தலைவர்,
மகளிர் இல்லம்,
அவுஸ்திரேலியா.

## பிரித்தானியாவில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்ல முறையில் இயங்கிவரும் தொண்டு நிறுவனமான SWO அமைப்பினால் பொதுமக்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்படவுள்ள விவேகானந்த பூங்கா திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள விஸ்வரூபம் நினைவு மலருக்கு வாழ்துச் செய்சி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

சுவாமி விவேகானந்தரது சிந்தனைகளை பின்பற்றி மக்களின் நலனுக்காக பணியாற்றுகின்ற இவ் அமைப்பின் SWO UK கிளைக்கு ஊடாக நீண்டகாலமாக இவ் அமைப்பிற்கு நான் மாதாந்த உதவி வழங்கி அவர்களின் தன்னலமற்ற சேவைகளில் நானும் பங்கெடுப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமை எனக்கு மகிழ்வைக் கொடுக்கின்றது.


இறைவனின் செந்தாமரைப் பாதங்களை சென்றடைந்த எனது அன்புக்குரிய தாய் தந்தையின் நினைவாக விவேகானந்த பூங்காவில் நீர் தாங்கி அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் வசதியினை ஏற்படுத்திக் கொடுக்க எனக்கு சந்தற்ப்பம் கொடுத்த இன் நிறுவன ஸ்தாபகருக்கும், நிருவாகிகளுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

இப் பூங்காவில் அமையப்பெற்றுள்ள சுவாமி விவேகானந்தரின் மிகப் பிரமாண்டமான திருவுருவச் சிலையும், ஏனைய துவறவிகளின் சிலைகளும், துறவிகளின் நாமங்களிலுள்ள பத்து இல்லங்களும், மிக அழகிய பூங்காவனமும் மக்களுக்கு எப்பொழுதும் மன அமைதியைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இப் பூங்காவிற்கு தேவையான உதவிகள் அனைத்தும் கிடைக்கப் பெற்று, மாவட்டத்திலுள்ள முழு மக்களையும் கவரக் கூடிய ஒரு பூங்காவாக இது அமைய வேண்டுமென இறைவனை மனதார பிரார்த்திப்பதுடன், திறப்பு விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்,
அன்புடன்,
வைத்தியநாத சர்மா குமரேசன்,
பணிப்பாளர்,
ஜே.ஏ.எஸ் ஒயில் லிமிட்டட்,
ஐக்கிய இராச்சியம்.



## பிரான்சில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி

மட்டக்களப்பு - கல்முனை, பிரதான வீதியின் கிரான்குளம் - குருக்கள்மடம் எல்லையில், தரிசு நிலமொன்று பசும் சோலையாகி பார்ப்போர் கண்களுக்கு விருந்தாகின்றதாம். தரிசிப்போர் மனங்களுக்கு இதமளிக்கின்றதாம். எதற்காக இவையென்று எவருக்குமே தெரியாதாம். கடந்த நான்காண்டுகளாக நானறிந்த சேதி இது. கேட்க சுவாரஸ்யமாக இருந்தது. தெரிந்தும் தெரியாதவராய் இருந்தேன்.

தானும்தன் பாடும் என அன்றைய சிவானந்த வித்தியாலயத்தில் கற்று வந்த என்னைப் போல் ஒருவர்தான் கந்தப்பன் சற்குணேஸ்வரன். தன் பூர்வபுண்ய பலனாக அவருக்கு குருவானார் சுவாமி ஆத்மகனானந்தர். பருமரத்தைப் பற்றிய பல்லி போல் குருவழியில் சென்றவர் ஆத்மகனானந்தரில் சுவாமி விவேகானந்தரைக் கண்டு விவேகானந்தரின் கொள்கைகளால் கவரப்பட்டார்.

நாவுக்கரசர் மேல் அப்பூதியடிகள் கொண்டிருந்த பக்திபோல் சுவாமி விவேகானந்தரின் நாமத்தால் பல்வேறு சமூகப் பணிகளைத் தொடக்கி வைத்தார். அந்தப் படிமுறையில் உருவாக்கப்பட்ட ஒன்றே இன்று எல்லோரையும் பிரமிக்க வைத்துக் கொண்டிருக்கும் விவேகானந்த பூங்கா.

மூன்றரை ஏக்கர் பரப்பிலமைந்த பூங்காவின் நுழைவாயிலை நெருங்கியதும் தியான வடிவில் நம் சிந்தையை செம்மையாக்கும் விஸ்வரூப விவேகானந்தர் சிலை நம்மை ஈர்த்தெடுக்கும். உள்ளே கண்கவர் வண்ணவண்ணப் பூக்கள் நிறைந்த பூஞ்செடிகளும் சமூகப் பணிகளுக்கே தம்மை அர்ப்பணித்த சாதுக்களின் சிலைகளும் ஸ்ரீராமகிருஸ்ண பரமஹம்ஸ தேவரின் நேரடி சீடர்கள் மற்றும் சில சுவாமிகளின் பெயர்களில் அமைந்து பார்வையாளர்கள் தங்கி நின்று உணவருந்துவதற்காக அமைக்கப்பட்ட நிரந்தர கூடாரங்களும் அனைவருக்கும் மனநிறைவு தரும் பெருவிருந்தாக உள்ளன.


இவ்வாண்டு ஆகஸ்ட், 25 (25.08.2024) ஞாயிறன்று விவேகானந்த பூங்கா மக்கள் பாவனைக்காக திறந்து விடப்படும் நிகழ்வு நடைபெற உள்ளதையும் அதையொட்டி சிறப்பு மலரொன்று வெளியிடப்பட உள்ளதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

என்னை இவ் வுலகில் ஒரு பண்பாளனாக வாழ நெறிப்படுத்திய என் குருநாதர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தமகராஜ் அவர்களுக்கு இப்பூங்காவில் ஒரு திருவுருவச் சிலை நிறுவவும் திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்கவும் வாய்ப்பளித்த விவேகானந்த பூங்காவின் நிருவாகத்தினருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புற அமைய பகவான் ஸ்ரீராமகிருஸ்ண தேவரை மனதார பிரார்த்தித்து வாழ்த்துக் கூறி நிற்கின்றேன்.

நன்றி

ஆழ்வாப்போடி கமலநாதன்
(கன்னங்குடா)
பிரான்ஸ்




**பிரித்தானியாவில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி**

முற்பணி பிற்பணி இடைநிறுத்தும் வேளையில் கற்சிலையாய் கல்லுருவாய் கண்முன்னே நின்று ஆசிர்வாதம் செய்தும் அனைத்து துறவிகளுக்கும் தலை வணங்குகிறேன். கிழக்கு மாகாணத்தில் ஏழைகளின் தோழராய் இயங்கிக் கொண்டிருக்கும் சமூக நலன்புரி அமைப்புக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு விவேகானந்த பூங்கா திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள "விஸ்வரூபம்" நினைவு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

முழு மக்களையும் கவரக்கூடிய மட்டக்களப்பு பிரதான வீதியில் கிரான்குளம் என்னும் இடத்தில் இப் பூங்கா அமைந்துள்ளது. மனதை அமைதிப்படுத்த ஆரம்பத்தில் தியான மண்டபம் அதை தொடர்ந்து சமயத் துறவிகளின் திருவுருவச் சிலைகளும் மனதுக்கு அமைதியைத் தருகின்றது.

இவ் அமைதிப் பூங்கா திருவுருவச் சிலைக்கு பங்களிப்புச் செய்ய எனக்கு சந்தர்ப்பம் வழங்கிய சமூக நலன்புரி அமைப்புக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.
நன்றி.

அன்புடன்,
திரு.புண்ணியமூர்த்தி தவராஜன்(UK)
பழுகாமம்



## ஜேர்மனியில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி

இந்து சமயத்தின் புகழை உலகறியச் செய்தவரான சுவாமி விவேகானந்தரின் பெயரில் மட்டக்களப்பு மண்ணில் ஒரு பூங்கா அமைக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட இருப்பதனையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு பூங்கா என்பதற்கப்பால் இந்து சமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றிய சுவாமி விபுலானந்தர், சுவாமி நடராஜானந்தர் மற்றும் சுவாமி ஜீவானந்தர் போன்றோருக்கு சிலை வைக்கப்பட்டிருப்பதும், சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலையோடு திரு மூவருக்கான திருப்பீடமும் அமைக்கப்பட்டு அதில் அவர்களின் திருவுருவப் படங்களும் வைக்கப்படவுள்ளதும் இவ்விடத்தை ஒரு ஆன்மீகத்தலமாக மாற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

உலகம் இன்று போர்ப்பீதியிலும் பல்வேறு சிக்கல் களிலும் சிக்கித்தவிக்கும் இவ்வேளையில் நமது எதிர்காலச்சந்ததியினரை ஆன்மீகப்பாதையில் திசை திருப்புவதற்கு இப்படியான முயற்சிகள் பெரிதும் கைகொடுக்குமென நம்புகின்றேன்.

இவ்வாறான ஒரு பூங்காவை இப் பிரதேசத்தில் உருவாக்க முன்னின்றுளைத்த திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களைப் பாராட்டுவதோடு, ஆசிரியர்களாகவும் அதிபராகவும் இருந்த அமரர்களான எனது பெற்றோர் திரு திருமதி தம்பிராஜா ஈஸ்பரம் ஆகியோர் நினைவாக இப்பணியில் இணைந்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பெரும்பேறாக நினைப்பதோடு இப் பூங்கா நீண்டகாலம் நிலைத்து செயற்பட எனது மனமர்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி .

இவ்வண்ணம்,
தம்பிராஜா பவானந்தராஜா (மட்டக்களப்பு)
Hunsruck Str 17, 52477, Alsdor,
Germany.



## கல்முனையில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி

“உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவுமே இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே.” என்ற விவேகானந்தரின் வாசகத்தை வேத வாக்காக ஏற்று மிகவும் பிரமாண்டமாக இயற்கை அழகோடு சாந்தமும் மன நிறைவும் கொண்ட விவேகானந்த பூங்காவினை திருவாளர் சற்குனேஸ்வரன் அவர்களும் அவரின் நிர்வாகமும் இனைந்து உருவாக்கிய பூங்கா கிழக்கின் புகழ் கூறி நிற்கும் என நம்புகின்றேன்.

உண்மையிலே இப் பூங்கா கல்முனை பிரதான வீதியில் இயற்கை நீர்நிலைகள் பறவைகள் சரணாலயம் என ஒருங்கே அமையப்பெற்ற அழகிய நிலப்பரப்பில் அமைந்துள்ளதனால் இது காலப்போக்கில் அதிகளாவன ஜாசகர்களின் மனதை கொள்ளைகொள்ளும் ஓர் அழகிய பூங்கா வனமாக காட்சியளிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

அது மட்டுமல்லாது இப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள ஆத்மயோதி விவேகானந்தரின் திருவுருவ சிலையின் அழகும் கம்பீரமும் அதிக வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலா பயணிகளை இவ்விடம் கொண்டுசேர்த்து உலகெங்கும் நமது பூங்காவின் புகழ் பாடி நிற்கும்.

விவேகானந்தர் மீது கொண்ட பற்றினாலோ அல்லது எம் மண்ணின் மீது கொண்ட பற்றினாலோ என்னவோ தெரியவில்லை என் மகன் திரு.எஸ்.தேவகாந்தன் இவ் பூங்கா விஸ்வரூபம் எடுக்க என் பங்கும் சிறிதேனும் இருக்கவேண்டும் எனும் ஆசையுடன் இவ் பூங்கா வளாகத்தினுள் ஓர் இல்லத்தினை அமைப்பித்தர்கன முழு நிதி பங்களிப்பினையும் செய்திருந்தார். அவரின் ஆசைபோல் மிக அழகாக அமைக்கப்பெற்று திறப்பு விழா நடைபெறுவதை எண்ணி அகம் மகிழ்கின்றோம்.

தங்களின் எண்ணம்போல் என்றும் இப் பூங்கா மற்றும் இப் பூங்கா உருவான வரலாறை தாங்கினிற்கும் விஸ்வரூபம் மலர் வெளியீடு என்பன சிறப்பாய் அமைவதற்கு இறைவனை பிராத்தித்து, இதற்காக அயராது பணியாற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்.
என்றும் இறைவன் திருவருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

நன்றி

திருமதி.வேத்திரவதி சிதம்பரப்பிள்ளை,
நாவிதன்வெளி,
கல்முனை.



**பிரித்தானியாவில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி**

சமூக நலன்புரி அபைப்பினால் மட்டக்களப்பு கிரான்குளத்தில் பொதுமக்களின் பாவணைக்காக திறந்துவைக்கப்படவுள்ள விவேகானந்த பூங்கா திறப்பு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள விஸ்வரூபம் நினைவு மலருக்கு வாழ்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நலன்புரி அமைப்பு அமைப்பினை நிறுவி அதனுடாக அளவற்ற பல ஆக்கபூர்வமான பணிகளை செய்துவரும் திருப்பழுகாமத்தை சேர்ந்த திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களது பணிகளை கண்டு பிரம்மித்து நிற்கின்றோம்.


இவர் தனது இளமைக் காலத்தில் இருந்து சுவாமி விவேகானந்தர் மீது கொண்டிருந்த உண்மையான பக்தி இன்று வீண்போகவில்லை என்பதனை காண்கின்றோம்.

விவேகானந்த பூங்காவில் அமையப்பெற்றுள்ள சுவாமி விவேகானந்தரின் மிகப் பிரமாண்டமான திருவுருவச் சிலையும், அழகிய பூங்காவனமும் மக்களுக்கு எப்பொழுதும் மன அமைதியைக் கொடுக்கும் ஒரு இடமாக இருக்கும் என நம்புகின்றேன்.

இப் பூங்கா பணிக்காக நிதியுதவி வழங்க எனக்கும் வாய்ப்பு கிடைத்தமையினை இட்டு நான் மிக்க மகிழ்வடைவதுடன், திறப்பு விழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்,
கோ.கோகுலராஜா,
ஐக்கிய இராச்சியம்.



**பிரித்தானியாவில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி**

காடும் குளமுமாய் முதலைகள் குதுகளமிட இருள் சூழ்ந்த வனமாக அன்று. பணியின் நிறைவாய் "விஸ்வரூபம்" கொண்டு இன்று பறவைகளின் சரணாலயமாய் அழகிய பூஞ்சோலையாக எங்கும் யாசகர்களின் மனதில் இதமான மகிழ்வும் ஆத்ம யோதியவன் ஆசியுமாய் மன நிறைவை தருகின்றது இந்த விவேகானந்த பூங்கா. எண்ணுகின்ற எண்ணங்களுக்கு மிகவும் சக்தி உள்ளது என்பதனை இன்று நிரூபித்து காட்டியுள்ளார் பழுகாமத்தின் வித்தான மகிந்தன் எழுவான் கரையின் ஒளியாகி கல்லடி சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவனாக பாடசாலை பருவத்திலே பல சாதனைகளையும் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து தினம் அயராது பணியாற்றிய சமூக தீபம் சற்குணேஸ்வரன் அவர்கள் இயல்பாகவே இயற்கைமீதும் உயிர்கள்மீதும் அன்பு கொண்டவர்.

இவ் சேவகனின் முதற்படியாக ஏழையின் கண்துடைக்க சமூக நலன்புரி அமைப்பினை உருவாக்கி ஏழை எளியவர் மாற்றுத்திறனாளிகளுக்கு முழுப்பணியாற்ற துவங்கினார். இவர் கடந்துவந்த பாதையில் தாய் தந்தையை இழந்தும் பிரிந்தும் கல்வி, உடை உறையுளுக்கு தவிக்கும் குழந்தைகளின் ஏக்கத்தைக்கண்டு அவர்களுக்கெனவே திலகவதியார் மகளிர் இல்லத்தை நிறுவி பல பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்றினார். அத்தோடு பணியை இடைவிடாது தொடர்ந்த இவர் பாடசாலை கல்வியின் பின் பல்கலைகழகம், கல்வியல் கல்லூரி கிடைக்காத மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு மாற்றுக்கல்வி முறைமையை கண்டறிந்த இவர் இளைஞர் யுவதிகளுக்காக தொழிநுட்ப பயிற்சி வழங்க திட்டமிட்டு விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியை நிறுவினார். இதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுத்து அவர்களை சொந்த உழைப்பில் உயர வழிகாட்டினார்.

இவ்வாறு இவரின் பணிகள் ஏராளம் அதன் வரிசையிலே இன்று சுவாமி மீது கொண்ட அளவு கடந்த பற்றின் பலாபலனாக இன்று இலங்கையில் மிகவும் உயரமான கம்பிரமான சிலையுடன் விவேகானந்த பூங்காவினை நிறுவி அதன் உருவான வரலாற்று மலராக "விஸ்வரூபம்" மலர் வெளியிடுவதை ஒட்டி மன மகிழ்கின்றோம். இப் பணிக்காக நிதியுதவி வழங்க எனக்கும் சந்தர்பம் கிடைத்தமையினை இட்டு மன மகிழ்வு அடைவதுடன், இப் பணிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

நன்றி.

இவ்வண்ணம்,
க.சுவர்ணபிரபா (கல்லடி உப்போடை)
இலண்டன்.



**டுபாயில் இருந்து ஒரு வாழ்த்துச்செய்தி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வருடங்களுக்கு மேலாக சமூக சேவை ஆற்றி வரும் சமூக நலன்புரி அமைப்பினால் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற விவேகானந்த பூங்கா திறப்புவிழா நடைபெற இருப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றைய இளம் சிறார்கள் நாளைய தலைவர்கள் என்ற ரீதியில் எம்மால் இயன்ற அளவு உதவிகளைச் செய்வதை எமது கடமையாகக் கருதும் நாங்கள் உங்களின் சமூக நலன்புரி அமைப்பானது ஆற்றி வருகின்ற அளப்பரிய சேவைகளையும், சிறந்த பணிகளையும் நாம் பாராட்டுகின்றோம். இதற்கு சமூக சிந்தனையினை மனதில் நிறுத்தி அயராது பணியாற்றுகின்ற நிறுவன ஸ்தாபகர் திரு.க.கற்குணேஸ்வரன் அவர்கள் நிறுவன செயற்பாடுகளை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு உந்து சக்தியாக இருப்பது எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் திறக்கப்படவுள்ள விவேகானந்த பூங்கா திறப்புவிழா அமைகின்றது.

எனவே இவ்வாறான மனிதநேயம் மிக்க சமூகப் பணிகளை சுவாமி விவேகானந்தரின் நாமத்தோடு யாருமே எதிர்பாராத விதமாக அனைவரையும் திரும்பிப் பார்க்கும் வண்ணம் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் சமயத்துறவிகளின் உருவச் சிலைகளும், அழகிய வண்ணமயமான பூந்தோட்டங்களும் மனதைக் கவருவதுடன் ,சிறந்த வாசகங்களுடன் மட்டக்களப்பு பிரதான வீதியில் விவேகானந்த பூங்கா திறப்பு விழாவில் வெளிவர இருக்கின்ற விஸ்வரூபம் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியையும் தெரிவிப்பதில் மிக மிகிழ்வடைவதுடன் உங்கள் நிறுவனத்தின் பணிகள் மேலும் தொடர இறைவனை வேண்டி உங்கள் நிறுவனத்தையும் மனதார வாழ்த்துகின்றோம்.

நன்றி

அன்புடன்
திரு.திருமதி.S.சு.விக்னேஸ்வரன்



## Dr.சி.விஜயபாலா அவர்களின் வாழ்த்துச்செய்தி

எழுந்திருங்கள், விழித்திருங்கள், இலக்கை அடையும் வரை ஓயாதீர்கள் என்ற சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிக்கமைய, இந்த நிறுவகத்தினரின் அயராத முயற்சியினால் விஸ்வரூபமாக உருப்பெற்றிருக்கும் இந்த பிரமாண்டமான விவேகானந்தா பூங்காவிற்கு, இம்மண்ணின் மைந்தன் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் உருவச் சிலை அமைக்க அனுசரணை வழங்கியதில் யான் பெருமிதமடைகின்றேன்.

எம்மை ஈன்று, வளர்த்து ஆளாக்கிய எமது தந்தை, பிரசித்த கிழக்கிலங்கை புகழ் மூத்த புகைப்படப்பிடிப்பாளர் அமரர் சோமநாதன் சின்னத்தம்பி (தாபகர், நியூ பெற்றிக்கலோ போட்டோஸ், மட்டக்களப்பு), எமது தாயார் அமரர் இராஜலக்ஷ்மி சின்னத்தம்பி, மற்றும் எமது சிரேஸ்ட சகோதரி அமரர் விஜயதேவி சின்னத்தம்பி (சிரேஸ்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்) ஆகியோரின் நினைவாக இது சமர்ப்பணம்.

நானும் எனது ஆரம்ப மற்றும் இரண்டாம் கல்வியினை இராமகிருஷ்ண மிசன் விவேகானந்தா மற்றும் சிவானந்தா தேசிய பாடசாலைகளில் படித்து, கிழக்கு பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று, கடந்த 30 ஆண்டுகளாக என்னை சேவைத்துறையில் அர்ப்பணித்துள்ளதுடன், இந்த விவேகானந்த கல்லூரி, விவேகானந்த சமூகம், விவேகானந்த பூங்கா ஆகிய முயற்சிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே எனது சேவை பங்களிப்பினை வழங்கியதுடன், இச்சேவை தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் ஐயம் இல்லை.


சுவாமி விபுலானந்தர், மதுரை தமிழ் சங்க பண்டிதர் பட்டம் பெற்ற இலங்கையில் முதல் நபர் இவராவார். இவர் துறவு பூண்டாலும் மக்களை விட்டு விலகவில்லை. சமூகத்தில் நிகழ்ந்த துன்பத்திலும் மகிழ்ச்சியிலும் பங்கெடுத்தவராவார். அந்நியர் ஆதிக்கத்தில் மதம் மொழி கலாசாரத்தில் இருந்த வீழ்ச்சியில் இருந்த தமிழ் சமூகத்தை இவர் தட்டி எழுப்பினார். அறிவியல் கல்வியானது தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்ற ஆர்வம் இவரிடம் இருந்தது. இவர் அறிவியல் கலை சொல்லாக்கத்திற்காக உழைத்திருக்கின்றார். யாழ்நூல் என்கின்ற மிகச்சிறந்த இலக்கியத்தை இவர் படைத்திருக்கின்றார். இது பழந்தமிழரின் இசைக்கருவியான யாழ் பற்றி சிறந்த ஆராய்ச்சி நூலாக போற்றப்படுகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களும் மேன்மையடைய வேண்டுமென்று விரும்பினார். நவீன மனிதனுக்குத் தேவையான பழங்கால சிந்தனைகள் என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் புகழ் வாய்ந்தவையாக உள்ளன. முத்தமிழை முதன்மைப்படுத்தி இவர் எழுதிய நூல்களும் ஆய்வுகளும் பெரும் புகழ் உடையனவாக காணப்படுகின்றன. இவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும் ஈழத்தில் பிறந்து ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கு இவர் ஆற்றிய பணிகள் அளப்பெரிய என்றால் மிகையல்ல.

இவ்வாறு மிகச்சிறந்த தமிழ்ப்பணிகளை ஆற்றி தமிழையே பெருமைப்படுத்திய சுவாமி விபுலானந்தர் அடிகளாருக்கு உருவச்சிலை அமைத்து அதனை இன்று திறந்து வைப்பதில் நானும், எனது குடும்பத்தினரும், மிகவும் சந்தோசமும் பெருமையும் கொள்கின்றோம்.

இந்த விஸ்வரூபமாக முயற்சிக்கு அயராது உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் கோடி நன்றிகள்!

விஜயபாலா சின்னத்தம்பி

PhD Scholar, DBA Doctoral Researcher,
MBA, PgDip, BBA, HNDA, MAAT, LICA,
FIABUK, MABEUK, DIFPMUK, MPMUSA, FCPM, MMCUSA



**ஆலோசகரின் வாழ்த்துக்கவி**

**"விவேகானந்த மலர்க்கா" ஆத்மீக மணம் வீசுகிறது**

அன்பொளிரும் மலர்க்காவே
அருள் மணக்கிறது - விவே
கானந்தரின் திருவுருவம்
கருணை பொழியுது
பறவைகளின் சரணாயலயம்
கீதம் இசைக்குது - இங்கே
சூரியரும் சந்திரரும்
ஒளியூட்டுது - அன்

மலர் வனத்தின் அழகுக் காட்சி
கண்களைப் பறிக்கும் - இங்கே
மக்கள் மனம் ஆறுதலை
வேண்டித் துதி செய்யும்
விவோகானந்த சுவாமிகளின்
ஆசி கிடைக்கும் - மலர்க்
காவினிலே மகிழ்ச்சி வெள்ளம்
பெருகி ஓடி வரும் - அன்

"சமூக நலன்புரி அமைப்பின்"
உயர் தாபகர் - எங்கள்
"சற்குனேஸ்வரனுடைய"
கற்பனை வளமே
கற்பனையே நிஜமான
காட்சி இனிக்குதே - தங்க
விவேகானந்த பூங்காவே !
வாழ்க! வாழ்கவே!

**அன்பின்**
**"கலாபூஷணம்"**
**க.தணிகாசலம்**
**சமூக நலன்புரி அமைப்பு**
**- ஆலோசகர் -**



## நிறுவன இணைப்பாளரின் செய்தி

எமது சமூக நலன்புரி அமைப்பானது 1996ம் ஆண்டு தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் மட்டக்களப்பு திருப்பழுகாமத்தினைச் சேர்ந்த மட்/சிவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் திரு.க.சற்குனேஸ்வரன் அவர்களால் ஸ்தாபிக்கபட்டு, அதே ஆண்டில் களுவாஞ்சிகு ம.தெ.எ.பற்று பிரதேச செயலகத்தில் ஒரு தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு பின்னர் சேவைப் பணிகளை மாவட்டரீதியாக விரிவு படுத்தும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஒரு தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு தற்போது பல மனிதாபிமான சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் எமது அமைப்பில் தற்போது மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 22 உறுப்பினர்கள் நிரவாக சபையில் உள்ளனர். அத்தோடு எமது நிறுவன திட்டங்களில் 36 சேவையாளர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

எமது நிறுவன பணிகளில் இன்று திறக்கப்படுகின்ற விவேகானந்த பூங்கா மிக முக்கியமானது.

உலகமெங்கும் பரந்து வாழும் பல நல்லுங்கள் பலரின் தன்னலமற்ற நன்கொடையினாலும் சில தொண்டு நிறுவனங்களின் நிதியுதவிகளாலும் எமது நிறுவனம் கடந்த 28 ஆண்டுகளாக பின்வரும் மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

1. திலகவதியார் மகளிர் இல்லம் எனும் பெயரில் 28 ஆண்டுகளாக ஆதரவ இழந்த பெண் சிறுமிகளுக்கு அனைத்து வசதிகளும் இலவசமாக வழங்கப்பட்டு கல்வியளிக்கப்படுகின்றது.
2. விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி மூலமாக இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
3. விசேட தேவையுடையோருக்கு இதுவரை 140 சக்கர நாற்காலிகளும், மற்றும் நடைப்பயிற்சி உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.
4. பிரதேசத்தில் அனர்த்தங்கள் ஏற்படும்போது உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றது.
5. வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
6. தொலைதூரம் கால்நடையாக பாடசாலை செல்லும் 52 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.
7. இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயின்று வெளியேறிய மிகவும் வசதி குறைந்த மாணவிகளுக்கு வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்படுகின்றது.
8. வறிய குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.
9. பெண் தலைமை தாங்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 43 மாணவர்களை பொறுப்பேற்று அவர்களின் கல்விக்காக மாதாந்தம் தலா ரூபா 6,000 வழங்கப்பட்டு வருகின்றது.
10. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 55 பல்கலைக்கழக மாணவர்களை பொறுப்பேற்று அவர்களின் உயர்கல்விக்காக மாதாந்தம் தலா ரூபா 10,000 வழங்கப்பட்டு வருகின்றது.
11. வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு குழாய்க் கிணறுகள் (Tube Well) அமைத்து கொடுக்கப்பட்டு வருகின்றது.
12. வசதியற்ற மக்களின் நன்மைகருதி இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை செய்து செயற்றை கண்ணக வில்லை பொருத்தப்பட்டு வருகின்றது.
13. கண் பார்வை குறைபாடுடைய மக்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் வழங்குதல்.

நன்றி.

இவ்வண்ணம்,
சமூகப் பணியில்,
திருமதி சிவசுந்தரி பிரபாகரன்,
இணைப்பாளர்,
சமூக நலன்புரி அமைப்பு (SWO)
மாவட்ட காரியாலயம்,
புதுக்குடியிருப்பு,



**விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளரின் செய்தி**

சமூக நலன்புரி அமைப்பின் ஒரு செயற்பாடாக காலத்தால் அழியாத எமது மாவட்டத்தில் சிறந்த ஒரு விடயமாக சுவாமி விவேகானந்தரின் 30 அடி சிலையுடன், சுவாமிஜி அவர்களின் வழிவந்து எமது மக்களுக்காக சேவை புரிந்த ஆன்மீக துறவிகளின் சிலைகளுடன் விவேகானந்தரின் கருத்துக்கள், ஆன்மீக தத்துவங்களுடன் அழகிய மலர்கள் பூத்துக்குலுங்க இந்த விவேகானந்த பூங்கா உருவாகியிருப்பது பெருமைக்குரிய விடயமாகும். அந்த வகையில் அதன் ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்கள் மட்/ சிவானந்தா தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களால் உந்தப்பட்டு அவரின் பொன்மொழிகளை தொகுத்து நூலாக வெளியிட்டதுடன் மட்டுமல்லாது அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையிலாக சமூக சேவையினையும் மேற்கொண்டு வருகின்றார்.

உலக தொழில்நுட்ப மாற்றத்திற்கு நாம் ஈடுகொடுக்கும் வகையில் எமது எதிர்கால சந்ததி வளர்ந்தாலும், அவர்களின் மனப்பாங்கு மாற்றத்தின் காரணமாக பல்வேறு கலாசார பாதிப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தற்போதைய மாணவர்கள், இளைஞர்களின் மனநிலையானது தனிமைப்படுத்தப்படுகின்றதுடன் உறவுப் பிணைப்புக்கள், சமூகமய சிந்தனைகள் குறைவடைந்து வருகின்றது. எனவே ஒன்றாக சேர்ந்து விளையாடுவதன் ஊடாக ஆரோக்கியமான மனநிலையினையும் ஆன்மீகத்தையும் புரியவைக்கும் ஓர் தளமாக மட்டுமின்றி, இனமத பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைக்கும் ஓர் இடமாக இந்த விவேகானந்த பூங்கா அமையும் என்பதில் ஐயமில்லை. அத்தோடு மட்டக்களப்பிற்கு வருகைதரும் உல்லாசப்பயணிகளை கவர்ந்து எமது மாவட்டத்திற்கு பெருமைசேர்க்கும் ஓரிடமாகவும் காணப்படும்.

சுவாமிஜியின் நேர்மறை சிந்தனை தூண்டலான **"நீ எதுவாக நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்"** எனும் கருத்திற்கு அமைவாக ஸ்தாபகர் அவர்களின் உறுதியான சிந்தனையின் ஒரு செயல் வடிவமாக இந்த விவேகானந்த பூங்கா காணப்படுகின்றது. சுவாமி விவேகானந்தரின் தத்துவத்தினை அடிப்படையாக கொண்டு இயங்கி வருகின்ற சமூக நலன்புரி அமைப்பின் நிர்வாகம் மற்றும் தன்னலம் கருதா பணியாளர்களின் பங்களிப்பும் இந்த பூங்கா சிறப்புற விளங்குவதற்கு மிக முக்கிய காரணமாகின்றது. அத்தோடு இதற்காக நிதி மற்றும் மனிதவள பங்களிப்புக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி.

க.பிரதீஸ்வரன்,<br>
நிறைவேற்று பணிப்பாளர்,<br>
விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி,<br>
புதுக்குடியிருப்பு,<br>
மட்டக்களப்பு.



## திலகவதியார் மகளிர் இல்ல முகாமையாளரின் செய்தி

திலகவதியார் மகளிர் இல்லத்தை ஸ்தாபித்து சமூகப்பணி செய்ய தன்னை அற்பணித்த ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் ஐயா அவர்களின் முயுற்சியினால் சுவாமி விவேகானந்தரை முன்நிறுத்தி ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்த பூங்கா திறப்பு விழாவிற்கு வெளியிடப்படும் “விஸ்வரூபம்” என்னும் பெறுமதியானதோர் சிறப்பு நூலுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

ஆதரவற்ற சிறுமிகளின் கல்வி வளர்ச்சியை இலக்காக கொண்டு எமது திருப்பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்லத்தை ஆரம்பித்து வைத்து சிறுமிகளின் எதிர்கால நலனை கருத்திற் கொண்டு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி கொண்டிருக்கும் ஸ்தாபகர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட விவேகானந்த பூங்காவானது சகல மக்களின் மனங்களையும் ஈர்க்கக்கூடியவகையில் பெரியதொரு விருட்சமாக வளர்ச்சியடைந்துள்ளது.

விவேகானந்தரின் நம்பிக்கையை மனதில் கொண்டு பலரின் உதவிகளையும் ஒத்தாசைகளையும் பெற்று யாவரும் மதிக்கத்தக்க பூத்துக்குலுங்கும் அழகிய பூங்காவையும் அதனுள் சிறுவர்களின் மனங்களை கவரும் விதம்விதமான விளையாட்டு உபகரணங்களையும் ஒழுங்கு செய்த சமூகதீபம் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்கள் சேவைமனப்பான்மையுடன் சமூகத்தின் சேவையாளனாய் விவேகவழிநின்று வேகமாய் விவேகானந்த பூங்காவை கட்டிமுடித்து பாரியதிறப்புவிழா கண்டுகொள்ளவிருக்கும் பெருமைக்குரிய ஸ்தாபகர் அவர்களின் சேவை மேலும் தொடர சாரதாதேவியின் ஆசிவேண்டி என்நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

நன்றி

இவ்வண்ணம்
திருமதி.ஆனந்தவாணி பத்மநாதன்
இல்லமுகாமையாளர்
திலகவதியார்மகளிர்இல்லம்
திருப்பழுகாமம்.



## முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலைய தலைவரின் செய்தி

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூக நலன்புரி அமைப்புஇ விவேகானந்த பூங்கா இரண்டும் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களின் இரு கண்கள். 1996இல் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சமூக நலன்புரி அமைப்பின் விடா முயற்சியினால் அவர் பெயர் சார்ந்த பூங்காவும் “விஸ்வரூபம்” மலரும் உதயமாகிறது. “எதையும் சாதிக்க வல்லவன்” என்ற சுவாமி விவேகானந்தரின் பொன் மொழிகள் இச் சமூக நலன்புரி அமைப்பு வளர்ச்சியிலும், விவேகானந்த பூங்காவின் உதயத்திலும், விஸ்வரூபத்திலும் தலை நிமிர்ந்து நிற்கிறது.

SWO நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஓர் விருட்சமாகும். போரும் இயற்கை அழிவும் மட்டக்களப்பை சின்னா பின்னமாக்கிய வேளை மட்டக்களப்பை தாங்கிப் பிடித்த நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். வாழ்வாதார உதவிகள், சிறுவர்களுக்கு உதவுதல், மகளிருக்கு உதவுதல், இளையோருக்கான தொழிசார் கல்வி என்று பல்கோண சமூக நல மேம்பாட்டில் இன்று அழகு மிகு பூங்காவை மட்/ கிரான்குளத்தில் ஆரம்பிப்பது மேலான மகிழ்ச்சியான செயற்பாடாகும். சுவாமி விவேகானந்தரை நினைத்து அவரின் மேலான சிந்தனைகளை வாழ்வியல் கடைப்பிடித்தல், சிறார்களை மகிழ்வித்தல், முதியோரை மகிழ்வூட்டல் சர்வதேச நியமங்களுடன் பூங்கா அமையப் பெறுவதால் சுற்றுலாப் பயணிகளுக்கு விருந்தளித்தல் என்று பற்பல விளைவுகளை மட்டக்களப்பு மாவட்டம் காணப்போகிறது. இதற்காக SWO நிறுவன ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களையும் அந் நிறுவனத்தையும் முல் / புது/ அன்னை ஸ்ரீ சாரதா நிலையத் தலைவர் என்ற வகையில் பெருமையுடன் பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

இலண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் அறங்காவலர் சபையில் இந்த மதிப்பார்ந்த SWO நிறுவனமும் இணைந்து முல் / புதுக்குடியிருப்பில் 2019இல் அன்னை ஸ்ரீ சாரதா நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வறுமையில் வாழும் பெண் பிள்ளைகளை ஒன்றாக்கி பாதுகாப்ப வசதி உணவு, உடை, அத்தியாவசியத் தேவை என கைகொடுக்கும் கைங்கரியத்தினை செய்து வருகின்றார்கள். யாவற்றிற்கும் நன்றி குறிப்பாக விவேகானந்த பூங்கா விஸ்வரூபமெடுத்து இலங்கையிலும் சர்வதேசத்திலும் புகழ் பெற மீண்டும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நன்றி.

அன்புடன்,
திரு.பொன்.பேரின்பநாயகம்,
தலைவர்,
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.



**முல்லைத்தீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலைய முகாமையாளரின் செய்தி**

விவேகானந்த பூங்காவைப் பற்றி கூறுவதாயின், திரு.க.சற்குணேஸ்வரனுக்கு தோன்றிய எண்ணமானது அவரது அயராத உழைப்பின் மூலம் உருப்பெறச் செய்து செயல்படுத்தப்பட்டு முழுமையடைந்த வடிவமே நாம் காணும் இந்த பூங்கா என்று கூறுவேன்.

இந்தக் கலியுகத்தில் சுவாமி விவேகானந்தரின் மானசீக சீடன் சற்குணேஸ்வரன்தான் என்பதில் பெருமை கொள்கின்றேன். என்னைப் பொறுத்தவரை சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வதற்கு அவரால் தெரிவு செய்யப்பட்ட கருவியே இவர். இவர் இளம் பருவத்தில் இருந்து தன்னலம் சார்ந்து ஒன்றையும் யோசிக்க மாட்டார். மக்களுக்காக மக்களின் நலனிற்கா யோசிப்பார்.

நாள்முழுதும் சுவாமிஜியின் கருத்துக்களை எந்தவடிவில் மக்களை சென்றடைய வைக்கலாம் என்று யோசித்துக்கொண்டு வாழ்பவர். அவர் மூலம் சிறுவர் இல்லங்கள், கல்வி நிலையங்கள், தொழிற்பயிற்சி நிலையங்கள் என பல சேவை வழங்கும் நிலையங்கள் உருப்பெற்றன. அந்தவகையில் இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு வயதையுடைய மனிதர்களும் ஒவ்வொரு வகையான மன அழுத்தத்திற்கு ஆளாகிக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த மனங்களில் சந்தோசப் பூக்கள் பூத்து குலுங்கவும் மன அமைதி பெறவும் உருவாக்கப்பட்டதே சுவாமி விவேகானந்த பூங்கா.

பூங்காவைப் பார்க்க வருகின்றவர்கள் சுவாமியின் அருளாசியைப் பெறுவதோடு மனக்கலக்கங்கள் நீங்கி மகிழ்ச்சியாகத் அவர்களது இருப்பிடம் திரும்ப வழியமைக்கும் இந்த மட்டக்களப்பு விவேகானந்த பூங்கா என்பதில் பேருவகை கொள்கின்றேன். இவ்வாறு பல சேவைகளைப் புரிந்து கொண்டிருக்கும் திரு.க.சற்குணேஸ்வரனின் சேவை மென்மேலும் வளர வாழ்த்துவதோடு அவருக்காக சுவாமி விவேகானந்தரின் பாத கமலங்களை பணிந்து நிற்கிறேன். வாழ்க வழமுடன்.

நன்றி.

பொதுச் சேவையில்,
திருமதி.ஜனனி ஜனகன்,
முகாமையாளர்,
அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.



**மண்டூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மன்ற தலைவரின் செய்தி**

மட்டக்களப்பின் தெற்கே இருபது கிலோமீற்ரர் தொலைவில் பற்ரைக்காடுகளாலும் முள்ளி மரங்களாலும் நிரம்பி காணப்பட்ட காணியானது இறைவன் திருவருளால் மாற்றமடைந்து இன்று அனைவரையும் கவரும் வண்ணம் எங்கும் இல்லாத ஒரு விவேகானந்த பூங்காவாக மாறியிருப்பது நம் எல்லோருக்கும் பெருமையான ஒரு விடயமென்றே கூறவேண்டும்.

சிவானந்தா பாடசாலையில் கல்வி கற்ற திருவாளர் சற்குணனேஸ்வரன் அவர்கள் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளைப்படிக்கும் போது அதனால் ஈர்க்கப்பட்டு ஒரு சமூகசேவையாளராக மாற வேண்டும் என்ற துாய சிந்தனை உருவாகிய போது அதற்கு சுவாமி ஆத்மகனானந்தா அவர்கள் பக்கபலமாக இருந்து வழிநடத்திச் சென்றதன் காரணமாக இன்று பல்வேறு விதமான சமூகப்பணிகளை முன்னேடுத்து செல்வதற்கு குருதேவர் அருள்கொடுத்துள்ளார்.என்பது பெருமைக்குரிய விடயமாகும் தன்னுடைய வடிவமைப்பினால் உருவாக்கப்பட்ட விவேகானந்தா பூங்காவானது இன்று எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ஒரு இடமாக மாறியிருப்பது மகிழச்சியான விடயமாகும். உள்ளத்தை கவர்ந்திழுக்கும் பூமரங்கள் ஒரு புறம் அழகு சேர்க்க மறுபுறம் வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் சிலை பிரதான வீதியைபார்த்தவண்ணம் இருக்கின்றது.இடைநடுவில் எண்கோண இல்லமும் சுவாமியின்சிந்தனை துளிகளை சுமந்து கொண்டிருக்கும நீழ் சதுர வெண்நிற துாண்களும், துள்ளிக்குதித்து விளையாடும் சிறுவர்களின் மனங்களை கொள்ளைகொள்ளும் விளையாட்டு முற்றமும் அமையப் பெற்ற விவேகானந்த பூங்கா வளம் செழிக்க வாழ்த்துக்கள்.

வீரத்துறவியின் விவேகச் சிந்தனைகள் மக்கள் மத்தியில் சென்றடைய வேண்டும் என்பதே இதன் பிரதான நோக்கம் என்பது அமைப்பாளரின் சிந்தையில் உதித்த எண்ணமாகும். பல துறவிகளின் பாதம் பட்டு புனிதமடைந்த ஒரு இடமாக இப் பூங்கா காணப்படுவது சிறந்த விடயமாகும். ஈழத்திருநாட்டில் ஆன்மீகவிழுமியங்களை வெளிப்படுத்துகின்ற ஒரு பூங்காவானது இல்லையென்றே சொல்ல வேண்டும்இப்படியான அழகு நிறைந்த பூங்காவினை அமைப்பதற்கு பாடுபட்ட SWO நிறுவனத்தில் பணிபுரிகின்ற அனைத்து பணியாளர்களையும் பாராட் டுவதோடு இதற்கான கட்டுமான பணிகளை முன்னேடுப்பதற்காக நிதி உதவி வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமையடைகின்றேன்.

திரு.கு.ஜதீஸ்குமார் (J.P)
தலைவர்,
ஸ்ரீ இராமகிருஷ்ண மன்றம்,
மண்டூர்

## விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி, புதுக்குடியிருப்பு






திலகவதியார் மகளிர் இல்லம், திருப்பழுகாமம்.





மாற்றுத் திறநாளிகளுக்கு முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு






தூர இடங்களில் இருந்து கால்நடையாக பாடசாலை செல்லும் 52 வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு





வறிய பாடசாலை மாணவர்களுக்கு வருடாந்தம் அப்பியாச கொப்பிகள், எழுதுகருவிகள் அன்பளிப்பு.



வறிய மாணவர்களுக்கு புதிய உடைகள் அன்பளிப்பு



வசதியற்ற மக்களின் நலன்கருதி அவ்வப்போது இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சை செய்து செயற்றை கண்ணக வில்லை பொருத்தும் பணி





**கண் பார்வை குறைபாடுடைய வறிய மக்களுக்கு கண்பரிசோதனை செய்யப்பட்டு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் வழங்கும் பணி.**





யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி.





வறிய யுவதிகளுக்கு இலவசமாக தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு





அரச திணைக்களங்களுக்கும், பாடசாலைகளுக்கும் தெய்வ மூவரின் திருவுருவப் படங்கள் அன்பளிப்பு.






Vivekananda Park
விவேகானந்த பூங்கா

# விவேகானந்த பூங்கா
# நிர்மாணப் பணிக்காக நிதியுதவி வழங்கியோர்

**திரு.க.சற்குணேஸ்வரன் அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**
(ஸ்தாபகர், விவேகானந்த பூங்கா)

**திரு.எஸ்.கருணலிங்கம் அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**
(செயலாளர், இலண்டன் ஶ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்)

**திரு.சர்மா குமரேசன் அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

Dr.**அம்பிகாபதி அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

**திரு.அமர்நீதி வாமதேவன் அவர்கள் (அமெரிக்கா)**

**திரு.எஸ்.தேவகாந்தன் அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

**திரு.திருமதி.விக்னேஸ்வரன் அவர்கள் (டுபாய்)**

**திரு.ரி.பவானந்தராஜா அவர்கள் (ஜேர்மனி)**

**திரு.பு.தவராஜா அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

**திரு.ஏ.கமலனாதன் அவர்கள் (பிரான்ஸ்)**

**திரு.எஸ்.பிரபா அவர்கள் (சுவிஸ்)**

**திரு.கோ.கோகுலராஜா அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

**திரு.கே.சொர்ணபிரபா அவர்கள் ( ஐக்கிய இராச்சியம் )**

Dr.**விஜயபாலா அவர்கள் (நாவற்குடா)**

**வெளிநாடுகளில் வாழும் பல மட்/சிவானந்த வித்தியாலய பழைய மாணவர்கள்**

**SWO –UK**



## நிருவாக உத்தியோகஸ்தரின் நன்றி பகிர்வு

எமது நிறுவனத்தினால் அமைக்கப்பட்டுள்ள விவேகானந்த பூங்கா திறப்பு விழாவில் மலர்கின்ற “விஸ்வரூபம்” சிறப்புமலருக்கு பெறுமதிமிக்க வாழ்த்துக்களை வழங்கிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் எமது விவேகானந்த பூங்கா சிறப்புற அமைய இதுவரை காலமும் உதவிகள் வழங்கிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது பூங்காவினுள் அமையப்பெற்றுள்ள சுவாமி விவேகானந்தர் இல்லம் அமைப்பதற்கான நிதியுதவியினை வழங்கியதுடன் அதற்கான சகல ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய எமது அமைப்பின் ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் முப்பது அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலையுடன், ஏனைய துறவிகளின் திருவுருவச் சிலைகளை நிறுவுவதற்கும், துறவிகளின் நாமங்களில் பத்து இல்லங்களை அமைப்பதற்கும், நீர்த்தாங்கி அமைப்பதற்கும், விளையாட்டு உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தேவையான நிதியினை வழங்கிய புலம்பெயர் உறவுகள், உள்நாட்டு வெளிநாட்டு நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எமது விவேகானந்த பூங்கா திறப்பு விழா சிறப்புற அமைவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது அமைப்பின் பணியாளர்கள், ஆக்கபூர்வமான திட்டமிடல் வழிகாட்டல்களை வழங்கிய மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மகராஜ் அவர்களுக்கும், எமது சிறப்புமலர் வெளியீட்டுக்கு ஆதரவு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும், சிலைகளை வடிவமைத்த அன்பருக்கும், மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி ஒத்தாசைகளை நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

இவ்வண்ணம்,
சமூகப்பணியில்,
நிருவாகிகள் சார்பாக,
திருமதி.சசிகலா இராமேஸ்வரன்
நிருவாக உத்தியோகஸ்தர்,
சமூக நலன்புரி அமைப்பு (SWO)
மாவட்டக் காரியாலயம்,
புதுக்குடியிருப்பு.



நான் உனக்கு போதுமான அளவுக்கு அறிவுரைகளை வழங்கியிருக்கின்றேன். இப்போது அதில் சிறிதளவாவது செயலுக்குக் கொண்டுவா. என் அறிவுரைகளைக் கேட்டதன் பயனாக வாழ்க்கையில் நீ வெற்றியைப் பெற்றாய் என்பதனை உலகம் புரிந்து கொள்ளட்டும்.

-சுவாமி விவேகானந்தர்

**“சுவாமி விவேகானந்தரைக் கற்போம். மனித குலத் தொண்டை வளர்ப்போம்”**

அன்பர்கள் கீழுள்ள எமது இணையத்தளத்தில் இருந்து சுவாமி விவேகானந்தரின் 450 அறிவுரைகளை கற்கலாம்.

**www.vivekanandapark.com**